
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

அக்டோபர் 2006
ரூ. 5.00



## வருகிறது
## சிறப்புப் பொருளாதார மண்டலம்!
## இறுகுகிறது
## மறுகாலனிய சுருக்கு!!

படிப்பகம்

www.padippakam.com

# காசுமீர்: அரசு பயங்கரவாதத்தின் இரத்த சாட்சிகள்!

காசுமீர் பள்ளத்தாக்கில் உள்ள குப்வாரா நகருக்கு அருகில் இருக்கும் சாஹல்பதி கிராமத்தைச் சேர்ந்த குலாம் மொஹைதீன் என்பவரும், ருபினா என்ற 14 வயது சிறுமியும் கடந்த ஆகஸ்டு 12-ஆம் தேதி அதிகாலையில், ''ராஷ்ட்ரிய ரைஃபிள்ஸ்'' என்ற துணை இராணுவப்படை சிப்பாய்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அன்று அதிகாலையில் விறகு பொறுக்குவதற்காகக் காட்டுக்குள் சென்றதுதான் அவர்கள் செய்த ''குற்றம்''; அதற்குத்தான் இந்த மரண தண்டனை!

சாஹல்பதி கிராமத்தைச் சேர்ந்த 10-க்கும் மேற்பட்டவர்கள் அன்று அதிகாலையில் விறகு பொறுக்குவதற்காகக் காட்டிற்குச் சென்றார்கள். அவர்களுள் ஒருவரான சஜா, ''இராணுவம் எங்களை நோக்கிச் சுடத் தொடங்கிய மறுநிமிடமே, ருபினா இரத்த வெள்ளத்தில் செத்துக் கிடந்ததாக'' அந்தப் பயங்கரத்தைப் பற்றிக் கூறுகிறார்.

''காட்டிற்குப் போவதற்காக என்னை, என் அம்மா அதிகாலை 5.20-க்கு எழுப்பி விட்டார். சில நிமிட தாமதத்தினால், நான் மற்றவர்களுடன் சேர்ந்து காட்டிற்குப் போக முடியவில்லை. ஆனால், அதற்குள்ளாகவே என் தங்கை பரிதாபகரமாக இறந்து போன செய்தி எங்கள் வீட்டிற்கு வந்து விட்டது'' என்கிறார், ருபினாவின் சகோதரர் அப்துல் வாஹித்.

தீவிரவாதி என்ற சந்தேகத்தின் பேரில் சுட்டுக் கொல்லப்பட்ட 14 வயது சிறுமி ருபினா.



ஜம்மு - காசுமீர் மாநிலத்தில் இந்திய இராணுவத்தால் நடத்தப்படும் இது போன்ற படுகொலைகளுள் பெரும்பாலானவை எல்லை தாண்டிய பயங்கரவாதிகளுடன் நடந்த மோதலாக சோடிக்கப்பட்டு, உண்மைக்கும் சமாதி கட்டப்பட்டு விடும். ஆனால், குலாம் மொஹைதீனும், ருபினாவும் கொல்லப்பட்ட சம்பவத்திலோ இந்திய இராணுவம் தனது ''தவறை'' ஒப்புக் கொள்ள வேண்டிய இக்கட்டில் மாட்டிக் கொண்டுவிட்டது.

இதற்கு இந்திய இராணுவத்தின் ''நேர்மையோ'', நியாய உணர்ச்சியோ காரணம் அல்ல. குலாம் மொஹைதீனையும், ருபினாவையும் இந்திய இராணுவம் சுட்டுக் கொன்றதைக் கண்ணால் கண்ட சாட்சிகள் இருப்பதால், இந்திய இராணுவத்தால், குலாம் மொஹைதீனையும், ருபினாவையும் எல்லை தாண்டிய பயங்கரவாதிகளைப் போல ''செட்-அப்'' செய்ய முடியவில்லை. மேலும், சம்பவம் நடந்த உடனேயே, குப்வாரா நகர மக்கள் ஒன்று திரண்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால், இப்படுகொலைச் சம்பவம் காசுமீர் மாநிலமெங்குமே அம்பலமாகி விட்டது.

எனினும், இராணுவம் தனது தீவிரவாதப் பீதியூட்டலை விட்டுவிடவில்லை. ''இராணுவத்தினர் பயங்கரவாதிகளைக் காட்டுக்குள் தேடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது சிலர் ஆயுதங்களோடு காட்டுக்குள் ஓடுவது தெரிந்தது. தீவிரவாதிகள் என நினைத்துக் கொண்டு இராணுவம் சுட்டதில் குலாம் மொஹைதீனும், ருபினாவும் இறந்து போய்விட்டார்கள். இது தவறுதலாக நடந்துவிட்ட துயரச் சம்பவமே தவிர, திட்டமிட்ட படுகொலை அல்ல'' என இராணுவ அதிகாரிகள் முதலைக் கண்ணீர் வடித்துள்ளனர்.

முன்னெச்சரிக்கைக் கூடச் செய்யாமல், உடனடியாகச் சுடும்படி இராணுவத்தினரைப் பயமுறுத்திய ஆயுதம் என்ன தெரியுமா? விறகு வெட்டுவதற்காக கிராமத்தினர் எடுத்துச் சென்ற கோடாரிதான் அந்த ஆயுதம். பனிமூட்டத்தில் தொலைவிலிருந்து பார்த்தபோது, தீவிரவாதிகள் ஏ.கே 47 ரக துப்பாக்கியை தோளில் சுமந்து செல்வது போலத் தெரிந்ததாம். எனவேதான் சுட்டுக் கொன்று விட்டார்களாம். செக்குக்கும், சிவலிங்கத்திற்கும் வேறுபாடு தெரியாத தெருநாயைப் போல நடந்து கொண்ட இந்திய இராணுவம் தரும் இந்த நியாயவாதத்தை நாட்டு மக்கள் நம்ப வேண்டுமாம்!

இச்சம்பவம் நடப்பதற்கு மூன்று நாட்கள் முன்னதாக, ஆகஸ்ட் 9 அன்று குலாம் முகம்மது ஷேக் என்ற மாணவர் மத்திய ரிசர்வ் போலீசு படையால், தால்கேட் சந்தைப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். குலாம் முகம்மது ஷேக், பயங்கரவாதியா, இல்லை அப்பாவியா என்பது உறுதியாகத் தெரியாத நிலையிலேயே, அவர் நடுத்தெருவில் நாயைப் போலச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 21**

**இதழ் 12**

**அக். 2006**

**உள்நாடு**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**

**தொலைபேசி: 94446 32561**


## தி.மு.க. அரசின் இலவசத் திட்டங்கள்:
# நிதி மர்மம் என்ன?

தேர்தல் முடிவுகளைக் கேட்ட மறுவினாடியே, தமது வாக்குறுதிகளை மறந்து விடுவதையும், மழுப்புவதையும் ஓட்டுக் கட்சிகளிடம் இதுவரை கண்டுவந்த அரசியல் நோக்கர்கள், இப்போது தி.மு.க. ஆட்சியின் செயல்பாடுகள், பேச்சுக்களைக் கண்டு மயக்கங் கொள்கிறார்கள். கருணாநிதி இப்போது நெஞ்சுயர்த்திச் சொல்கிறார், "தேர்தல் அறிக்கையில் 177 வாக்குறுதிகள் தரப்பட்டன. அவற்றில் 62 வாக்குறுதிகளை நிறைவேற்ற பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு தேவையில்லாத 74 வாக்குறுதிகளில் 45 வாக்குறுதிகளின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதல் ஆண்டிலேயே மூன்றில் இரண்டு பங்கு வாக்குறுதிகளை நிறைவேற்றி விடுவோம்." கருணாநிதி ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி; விவசாயக் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது, பள்ளிக் குழந்தைகளுக்கான சத்துணவில் வாரம் இரண்டு முட்டைகள் ஆகிய மூன்று வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி உத்திரவு போட்டார்.

இவை தவிர, தி.மு.க. தேர்தல் அறிக்கையின் நட்சத்திர வாக்குறுதிகளான ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலப்பட்டா, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஆகியன தி.மு.க. வழக்கமாகக் கொண்டாடும் முப்பெரும் விழா நாட்களில் தொடங்கப்பட்டு விட்டன. 24,949 ஏழை விவசாயிகளுக்கு 26,321 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. 25,245 வண்ண வானொளிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. பத்து இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வரும் ஜனவரி பொங்கல் முதல் இலவச எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம் அமலாகும் என்று மு.க. அறிவித்துள்ளார். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேல் காத்திருக்கும் இளைஞர்களுக்கு அவரவர் கல்வித் தகுதிக்கேற்ப மாதம் ரூ. 150 முதல் 300 ரூபாய் வரை உதவித் தொகை அக்டோபர் முதல் வழங்கப்பட உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜெயலலிதா அரசால் கொண்டு வரப்பட்ட அரசு ஊழியர் வேலை நிறுத்தத் தடைச் சட்டம், மதமாற்றத் தடைச் சட்டம் ஆகியவை நீக்கப்பட்டன. அகற்றப்பட்ட கண்ணகி சிலை மீண்டும் நிறுவப்பட்டது. உழவர் சந்தை, ஏழைகள் திருமண உதவி போன்றவை மீண்டும் கொண்டு வரப்பட்டன. பழிவாங்கப்பட்ட அரசு ஊழியர்கள், கிராமநல ஊழியர்கள், சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலைகள் கொடுக்கப்பட்டன. தடை செய்யப்பட்ட ஆசிரியர், அரசு ஊழியர் வேலை வாய்ப்புகள் மீண்டும் ஏற்படுத்தப்படுகின்றன. பல ஆயிரம் பேருக்கு இதனால் வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்கள் உறுதிப்படுத்தப்படுவதோடு இளைஞர் சுய உதவிக் குழுக்களும் நிறுவப்பட்டு விரிவுபடுத்தப்படுகிறது. ஆசிரியர்கள் - அரசு ஊழியர்களிடமிருந்து பறிக்கப்பட்ட பல உரிமைகள் - பலன்கள் மீண்டும் நிலைநாட்டப்படுகின்றன.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களைக் குறிவைத்துதான் இலவச-கவர்ச்சித் திட்டங்களை கருணாநிதி அரசு விரைந்து செயல்படுத்துகிறது என்றபோதும், அவை குறைபாடுகள் நிறைந்தனவாக உள்ளன என்றபோதும், தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையையும், கட்டுமான மறுசீரமைப்பையும் செய்யும்படி உத்தரவிடும் அமெரிக்க மேல்நிலை வல்லரசின் தலைமையிலுள்ள உலக வர்த்தகக் கழகம் (WTO), உலக வங்கி (WB), மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் (IMF) ஆகியவற்றின் ஆதிக்கத்தின் கீழ் இவ்வாறு இலவச கவர்ச்சித் திட்டங்களை எப்படிக் கொண்டுவந்து செயல்படுத்த முடிகிறது? இந்தக் கேள்விதான் அரசியல் பார்வையாளர்கள் பலரையும் மயக்கங் கொள்ளச் செய்கிறது.

உண்மை விவரங்களைத் தொகுத்தும் பகுத்தும் பார்த்தால், இந்தக் கேள்வி ஒன்றும் எளிதில் விடைகாண முடியாதவாறு சிக்கலானதில்லை. தரிசு நிலங்களைக் கண்டறிந்து, மேம்படுத்தி நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் அதே கருணாநிதி அரசுதான், ஒவ்வொன்றும் குறைந்தது 1000 ஏக்கர் பரப்புக்கும் மேலான விவசாய நிலங்களைக் கொண்ட சிறப்புப் பொருளார மண்டலங்களை தமிழகத்தின் நான்குநேரி, சென்னை - எண்ணூர், திருப்பெரும்புதூர், ஒசூர், கோவை, மதுரை ஆகிய இடங்களில் நிறுவுவதற்கான ஏற்பாடுகளை விரைவாகச் செய்து வருகிறது. ஏற்கெனவே சென்னை - தாம்பரத்தில் உள்ள சென்னை பொருளுற்பத்தி மண்டலம் ("மெப்ஸ்") மற்றும் செங்கை அருகே உள்ள மகிந்திரா சிட்டி போன்றவை தாம் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள். விவசாய விளைநிலங்களை அடிமாட்டு

தொடர்ச்சி 9-ஆம் பக்கம்

www.padippakam.com

# வருகிறது சிறப்புப் பொருளாதார மண்டலம் (SEZs)!

# இறுகுகிறது மறுகாலனிய சுருக்கு!!

"வாங்கண்ணா, வாங்க! அதிருஷ்டம் உங்களை அழைக்கிறது!" - இது, சிறிது காலத்திற்கு முன்பு தடை செய்யப்படும்வரை எங்கெங்கும் ஒலித்த லாட்டரி சீட்டு வியாபாரிகளின் குரல் அல்ல. மைய அரசின் வார்த்தகத் துறை அமைச்சரான கமல் நாத், லாட்டரி சீட்டு வியாபாரிகளையே விஞ்சும் வகையில் இப்படி அறைகூவி அழைக்கிறார். உழைக்கும் மக்களாகிய நம்மை அவர் அழைக்கவில்லை. தரகுப் பெருமுதலாளிகளையும், நிலமுதலைகளையும் பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகளையும்தான் அவர் இப்படி அறைகூவி அழைக்கிறார்.

"தலைவா, இது உங்களோட சமஸ்தானம்; இங்க நீங்க உங்க இஷ்டப்படி ராஜ்ஜியம் நடத்தலாம்; நாங்க எந்தக் கேள்வியும் கேட்கமாட்டோம்; வாங்க தலைவா, வந்து உங்க தொழில நடத்துங்க!" என்று காலில் விழாத குறையாக தனது எஜமானர்களை உபசரித்து அழைக்கிறார் கமல்நாத். தமது பகற்கொள்ளைக்கும் ஆக்கிரமிப்புக்கும் ஆதிக்கத்துக்கும் காங்கிரச் கூட்டணி அரசு பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்பதைக் கண்டு பூரித்துப் போகும் ஏகாதிபத்தியவாதிகள், "எங்க காட்டுல மழை பெய்யுது; எங்க கோட்டையில் கொடி ஏறுது" என்று மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கும்மாளமடிக்கின்றனர். நாட்டை ஏகாதிபத்தியவாதிகளுக்குக் கூறுபோட்டுக் கொடுக்கும் இந்தத் திட்டத்தையே காங்கிரசு கூட்டணி அரசு, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZs) என்றழைக்கிறது.

"செஸ்" என்று ஆங்கிலத்தில் சுருக்கமாகக் குறிப்பிடப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones - SEZs) எனும் திட்டம், கடந்த 2000-வது ஆண்டில் ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு, நாடாளுமன்ற ஒப்புதலுக்குப் பிறகு கடந்த ஜூன் 23, 2005-இல் அரசுத் தலைவரின் அங்கீகாரத்துடன் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து தமிழகத்தில் நான்குநேரியிலும் குஜராத்தில் பாசிட்ராவிலும் முதன்முதலாக சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியது. தற்போது சென்னை - எண்ணூரில் 2,500 ஏக்கர் பரப்பளவில் மிகப் பெரிய சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இங்கு டிட்கோ, சிப்காட் ஆகிய அரசுத்துறை நிறுவனங்களோடு அம்பானி குடும்பத்தின் ரிலையன்ஸ் நிறுவனமும் கூட்டுச் சேர்ந்து தொழில் தொடங்க முன்வந்துள்ளது. இது தவிர, மும்பையில் 12 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பிரம்மாண்டமாகவும், அரியானா மாநிலத்தில் 45 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலும் இத்தகைய மண்டலங்கள் நிறுவப்படவுள்ளன.

சென்னையில் ஏற்கெனவே மெட்ராஸ் ஏற்றுமதி பொருளுற்பத்தி மண்டலம் ("மெப்ஸ்"), மகிந்திரா சிட்டி ஆகிய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உள்ளன. இவை தவிர, சென்னையை அடுத்துள்ள திருப்பெரும்புதூர், ஒசூர், கோவை, மதுரை ஆகிய இடங்களிலும் இத்தகைய மண்டலங்களை அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மாநிலத்தைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரால் போலி கம்யூனிஸ்டுகள் முதல் அனைத்து மாநில முதல்வர்களும் வேகவேகமாக இத்தகைய மண்டலங்களை நிறுவ முயற்சித்து வருகின்றனர். ஏறத்தாழ ஒரு நாளைக்கு ஒன்று என்ற வேகத்தில் நாடெங்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டு வருவதாக "பிசினஸ் அண்டு எக்கானமி" என்ற ஆங்கில வாரப் பத்திரிகை குறிப்பிடுகிறது. அந்நிய முதலீடுகள் வெள்ளமெனப் பாய்ந்து, தொழிலும் வர்த்தகமும் வேலை வாய்ப்பும் பெருகி, நாட்டை வல்லரசாக மாற்றுவதற்கான ஏற்பாடுதான் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்பதாக ஆட்சியாளர்கள் சித்தரிக்கின்றனர்.

ஆனால், இது நாட்டை வல்லரசாக்க ஆட்சியாளர்கள் மூளையைக் கசக்கிக் கண்டுபிடித்துள்ள புதிய திட்டம் அல்ல. பழைய கள்ளைப் புதிய மொந்தையில் ஊற்றிக் கவர்ச்சிகரமாக வியாபாரம் செய்வதற்கான ஏற்பாடுதான். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள ஏற்றுமதி பொருளுற்பத்தி மண்டலங்க

தமிழகத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பது தொடர்பாக முதலமைச்சர் கருணாநிதியைச் சந்திக்கும் தரகுப் பெருமுதலாளி அனில் அம்பானி.





படிப்பகம்

ளின் (Export Processing Zones) புதிய பரிமாணம்தான் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்!

1980-களில் இந்தியா மட்டுமின்றி உலகின் பல ஏழை நாடுகளில் இத்தகைய மண்டலங்கள் உருவாகி, இன்று 116 நாடுகளில் 3000-க்கும் மேற்பட்ட ஏற்றுமதி பொருளுற்பத்தி மண்டலங்கள் பெருகி விட்டன. இப்படி எல்லா நாடுகளும் ஏற்றுமதி மண்டலங்களைப் பெருக்கத் தொடங்கியதும், ஒவ்வொரு நாடும் ஏகாதிபத்திய முதலீட்டாளர்களுக்குச் சலுகை மேல் சலுகைகளை வாரியிறைத்து முதலீட்டைத் தக்கவைத்துக் கொள்ள முயன்றன. இவ்வாறு வளர்ந்துவரும் போட்டியைச் சமாளிக்கவும், அன்னிய நேரடி முதலீட்டை உயர்த்தி அதைத் தக்க வைத்துக் கொள்ளவும் சீனாவின் முதலாளித்துவ ஆட்சியாளர்களால் 1980-களின் இறுதியில் உருவாக்கப்பட்டவைதான் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள். மற்ற நாடுகள் சில சலுகைகளைத் தருவார்கள்; நாங்கள் ஒரு சமஸ்தானத்தையே அமைத்துத் தருகிறோம் என்று சீனாவின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் உருவாக்கிய இம்மண்டலங்கள்தான், உலகமயச் சூழலில் வளர்ச்சிக்கான ஒரே வழி என்பதாக முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் காட்டுகின்றனர். ஒரு காலத்தில் சாதாரண மீன்பிடி கிராமமாக இருந்த சென்ஷென், இன்று பல்லாயிரம் கோடி அமெரிக்க டாலர் முதலீட்டைப் பெற்றுள்ள மாபெரும் சிறப்புப் பொருளாதார மண்டலமாக வளர்ந்துள்ளது. இதேபோல சீனாவின் ஷாங்காய், காண்டன், ஹாங்காங் ஆகிய நகரங்களின் வளர்ச்சியைக் காட்டி, சீனாவைப் போல அன்னிய முதலீட்டைப் பெருமளவில் குவித்து, சீனாவைப் போலவே இந்தியாவையும் 'வல்லரசாக' மாற்ற, அதேபாணியில் உருவாக்கப்பட்டவைதான் இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்.

இந்தியாவில் உருவாக்கப்படும் இத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலங்களைத் தனியார் நிறுவனங்கள் மட்டுமின்றி, அன்னிய நிறுவனங்களும் அமைத்துக் கொள்ளலாம் என்று தாராள அனுமதி தரப்பட்டுள்ளது. அம்பானியின் ரிலையன்ஸ், டாடா, மஹிந்திரா, ஹிந்துஸ்தான் கட்டுமான நிறுவனம், சஹாரா, யுனிடெக், அடானிஸ், டி.எல்.எஃப் ஆகிய பெரு முதலாளித்துவ நிறுவனங்கள் இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்க அனுமதி பெற்றுள்ளன. நாடெங்கும் 94 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அடுத்த 18 மாதங்களில் செயல்பட ஆரம்பித்து விடும் என்றும்; நாடெங்கும் மொத்தமாக 300 சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்க வேண்டும் என்றும் மைய அரசு கூறி வருகிறது.

முந்தைய ஏற்றுமதி பொருளுற்பத்தி மண்டலங்களிலிருந்து சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் வேறுபட்டவை; இதன் பெயரிலேயே இப்போது பொருளுற்பத்தி என்ற வார்த்தை நீக்கப்பட்டு விட்டது. அதாவது, பொருளுற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்கள் மட்டுமின்றி, வர்த்தக நிறுவனங்களும் சேவை நிறுவனங்களும் இங்கு தொழில் நடத்தலாம். எல்லா சலுகைகளும் இந்நிறுவனங்களுக்குத் தரப்

# விவசாய நிலங்கள் ஆக்கிரமிப்பு! தமிழனின் வாழ்வுரிமை பறிப்பு!

ஓசூருக்கு அருகிலுள்ள சானமாவு, பைரமங்கலம், குந்துமாரனப்பள்ளி, அஞ்செட்டிப்பள்ளி ஆகிய நான்கு ஊராட்சிகளில் 15-க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட பகுதியில் 3600 ஏக்கர் பரப்பளவில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படவுள்ளது. மூன்றாண்டுகளுக்கு முன்பே முந்தைய அ.தி.மு.க. அரசு இதற்கான அறிவிப்பை வெளியிட்டது. தற்போது தி.மு.க. கூட்டணி அரசு இதனை நடைமுறைக்குக் கொண்டுவரும் வேலையில் வேகமாக இறங்கியுள்ளது.

ஓசூர் வட்டாரத்திலுள்ள கிராமங்கள் செழிப்பானவை. இங்கு நிலவும் மிதமான வெப்பநிலை, செழிப்புத்தன்மை ஆகியவற்றைக் கண்டு வெள்ளைக்காரர்கள் இப்பகுதியை "லிட்டில் இங்கிலாந்து" என்று பெயரிட்டு அழைத்தனர். இங்கு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமையவுள்ள பகுதியில் 15-க்கும் அதிகமான சிறிய ஏரிகள் உள்ளன. இங்கு தக்காளி, பீட்ரூட், காரட், முள்ளங்கி, முட்டைகோஸ் முதலான காய்கறிகள் பயிரிடப்பட்டு, தமிழகம் மட்டுமின்றி கேரளம் - கர்நாடகத்துக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. மேலும் இந்தக் கிராமங்கள் 20,000-க்கும் அதிகமான கால்நடைகளைக் கொண்டு, கால்நடை வளர்ப்புத் தொழிலும் செழுமையாக உள்ளது. இவற்றையெல்லாம் நாசமாக்கி விவசாயிகளின் வாழ்வைச் சூறையாட ஆட்சியாளர்கள் கிளம்பி விட்டனர்.

ஓசூரில் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கும் அதைத் தொடர்ந்து வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் அமைப்பதற்கும் ஏற்கெனவே 3000 ஏக்கர் விவசாய நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டன. அதன்பிறகு ரோஜாமலர் எஸ்டேட்டுகள், காய்கறி - மூலிகைப் பண்ணைகள் நிறுவி ஏற்றுமதி செய்வது என்ற பெயரில் 1200 ஏக்கர் விவசாய நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. தற்போது, 3600 ஏக்கர் பரப்பளவில் சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவப்படுவதால், ஆயிரக்கணக்கான விவசாயிகள் விவசாயத்திலிருந்தே விரட்டியடிக்கப்படவுள்ளனர். சிறப்புப் பொருளாதார மண்டலம் வரப்போவதை முன்கூட்டியே அறிந்து கொண்ட ரியல் எஸ்டேட் முதலாளிகள், இப்பகுதி விவசாயிகளிடம் ஆசை காட்டி அற்ப விலைக்கு நிலங்களைப் பிடுங்கி வருகின்றனர்.

சிறப்புப் பொருளாதார மண்டலத்தாலும், காய்கறி - மலர்ப் பண்ணைகளாலும், தொடரும் நில ஆக்கிரமிப்புகளாலும் விவசாயிகள் அடுத்தடுத்து நிலங்களைப் பறிகொடுத்து நாடோடிகளாக்கப்பட்டு வருகின்றனர். வேறு தொழில்கள் ஏதும் தெரியாமல் பஞ்சம் பிழைக்க அண்டை மாநிலங்களுக்கு ஓடுகின்றனர். ஓசூர் உழவர் சந்தையையே மூடிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலைமைகளை விளக்கி, சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் பெயரால் தமிழக அரசு விவசாய நிலங்களை ஆக்கிரமிப்பு செய்து வருவதைத் தடை செய்யக் கோரி இப்பகுதியில் இயங்கிவரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள், விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இம்மறுகாலனிய ஆக்கிரமிப்புக்கு எதிராக துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு விவசாயிகளிடம் விழிப்புணர்வூட்டி வருகின்றன. மறுகாலனிய தாக்குதலுக்கு எதிராக விவசாயிகளையும் தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் அணிதிரட்டி வரும் இவ்வமைப்புகள், போராட்டத்துக்கான ஆயத்தப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

– பு.ஜ. செய்தியாளர், ஓசூர்.



படிப்பகம்

www.padippakam.com

டும். இதனாலேயே வீட்டுமனைத் தொழில், அடுக்குமாடி கட்டிடத் தொழில், மருத்துவமனைகள், பேரங்காடிகள் (''ஷாப்பிங் மால்'') முதலான தொழில்களில் ஈடுபட்டு வரும் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களும் அன்னிய ஏகபோக நிறுவனங்களும் இத்தகைய மண்டலங்களை அமைக்கப் படையெடுக்கின்றன. இவற்றுக்காகவே விவசாய நிலங்கள் அடிமாட்டு விலைக்குக் கையகப்படுத்தப்படுகின்றன. டெல்லியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 4.20 லட்சம் ஏக்கர் நிலங்கள், ஒரு சதுர மீட்டர் ரூ. 50 வீதம் விவசாயிகளிடமிருந்து அரசால் பறிக்கப்பட்டுள்ளன; ஆனால், சந்தை விலையோ இதைவிட பலமடங்கு அதிகமானதாகும்.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தொழில் நடத்தும் தரகுப் பெருமுதலாளித்துவ - அன்னிய ஏகபோக நிறுவனங்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு 100% வரி விலக்கு அளிக்கப்படும்; அடுத்த ஐந்தாண்டுகளுக்கு 50% வரி விலக்குத் தரப்படும். கச்சாப் பொருட்கள், மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள முழுமையான சுங்க வரி விலக்கு, சிறுதொழில்களுக்கென ஒதுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களை இங்கு தயாரித்துக் கொள்ள தாராள அனுமதி, உள்நாட்டுச் சந்தையிலிருந்தே வாங்கப்படும் உதிரி பாகங்களுக்கு மத்திய கலால் வரியிலிருந்து முழுமையான விலக்கு, மத்திய விற்பனை வரி ரத்து, உற்பத்திப் பொருட்களை மற்ற நிறுவனங்களிடம் துணை ஒப்பந்த முறையில் தயாரித்துக் கொள்ளவும், ஒப்பந்த மறையில் தொழிலாளர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளவும், பெண்களை இரவு நேர வேலைகளில் பணியமர்த்திக் கொள்ளவும் தாராள அனுமதி - எனக் கணக்கற்ற சலுகைகள் வாரியிறைக்கப்பட்டுள்ளன.

ஆட்சியாளர்கள் தலையில் வைத்துக் கொண்டாடும் இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அனைத்தும் செயல்பாட்டுக்கு வந்தால், அதன் மூலம் 1,00,000 கோடி ரூபாய் அந்நிய முதலீடு நாட்டுக்குக் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. அதேசமயம், இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் முதலீடு செய்யப் போகும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் இறக்குமதி வரிச் சலுகையின் மூலம் மட்டும் மைய அரசுக்கு 90,000 கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்படுகிறது. அதாவது, முதலீடு செய்யும் நிறுவனங்கள் உற்பத்தி - விற்பனையைத் தொடங்கு ம்ன்பே, தங்களின் முதலீட்டில் ஏறத்தாழ 90 சதவீதத்தை வரிச் சலுகையாகத் திரும்ப எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். உமியைக் கொண்டு வந்தவன் அவலைத் தின்னப் போகும் அநியாயத்தைத்தான் நாடு சந்திக்கப் போகிறது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் இந்தியத் தொழிற்சங்க சட்டங்கள் எதுவும் செல்லாது; தொழிற்சங்

# மேற்கு வங்கத்தைப் பாருங்கள்! துரோகிகளைப் புரிந்து கொள்ளுங்கள்!

வரலாறு படைக்கிறார் மே.வங்க போலி கம்யூனிச முதல்வர் புத்ததேவ் பாட்டாச்சார்யா. மே.வங்கத்தில் 22,500 ஏக்கர் பரப்பளவில் மிகப் பெரிய சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவி வரும் வரலாறு, வரலாறு கண்டிராத வகையில் மே.வங்கத்தின் அடிக்கட்டுமானத் துறையை மேம்படுத்த இந்தோனேஷிய சலீம் குழுமத்துடன் ரூ. 40,000 கோடி மதிப்பீட்டுக்கான ஒப்பந்தம் போட்டுள்ள வரலாறு, இந்தியாவிலேயே ஜப்பானிய முதலீட்டை மிக அதிகமாகப் பெற்றுள்ள மாநிலம் என்று மே.வங்கத்தை முன்னணிக்குக் கொண்டு வந்த வரலாறு, அன்னிய நேரடி முதலீட்டில் மகாராஷ்டிரா, தமிழகத்துக்கு அடுத்த மூன்றாவது இடத்துக்கு மே.வங்கத்தை இழுத்து வந்த வரலாறு, எங்கள் கொள்கைகளை 180 டிகிரிக்கு தலைகீழாக மாற்றிவிட்டோம் என்று வாக்குமூலமளித்து செயல்படுத்தி வரும் நேர்மையின் வரலாறு - என புத்ததேவின் சாதனைகளைப் பட்டியல் போட்டு மாளாது. ''சிவப்பிலிருந்து செல்வச் செழிப்புமிக்க மாநிலமாக மே.வங்கத்தை புத்ததேவ் மாற்றி வருகிறார்'' என்று ஆளும் வர்க்க ஊதுகுழலான ''இந்தியா டுடே'' வார இதழே சிறப்புக் கட்டுரை வெளியிடுமளவுக்கு அவர் ஏகாதிபத்திய சேவையில் புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறார்.

இப்படி, மாநிலத்தைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரால் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து சிறப்புப் பொருளாதார மண்டலத்தை மே.வங்க அரசு நிறுவிக் கொண்டிருக்கும்போது, சி.பி.எம். கட்சியின் தலைவர்களோ, சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிராக வீரவசனம் பேசுகிறார்கள். மகாராஷ்டிரா மாநிலத்தில் அமையவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலத்தை எதிர்த்து நடந்த விவசாயிகள் போராட்டத்தில் பங்கேற்ற சி.பி.எம். கட்சித் தலைவர்களுள் ஒருவரான எச்சூரி, விவசாயிகளின் வாழ்வைப் பறிக்கும் இத்தகைய திட்டங்களை ஒருக்காலும் அனுமதிக்க மாட்டோம் என்று சூளுரைக்கிறார்.

சிறப்புப் பொருளாதார மண்டலத்தை சி.பி.எம். கட்சி ஆதரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்று புரியாமல் அக்கட்சி அணிகளே குழம்பிப் போனார்கள். ஒருவழியாக, சி.பி.எம். கட்சியின் பொதுச்செயலாளரான பிரகாஷ் காரத் தமது கட்சியின் 'புரட்சிகர' நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திவிட்டார். ''சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை; ஆனால், கண்மூடித்தனமாக விவசாய நிலங்களை ஆக்கிரமித்து இத்தகைய மண்டலங்களை அமைக்கக் கூடாது. இதனால் விவசாயமும் விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள். மேலும், ஆலை அமைப்பதற்கும், அடிக்கட்டுமான தேவைகளுக்கும் எவ்வளவு நிலம் தேவையோ அதை வரையறுத்து அதற்கேற்ப

**இந்தோனேஷியாவின் சலீம் குழுமத் தலைவருடன் மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா.**





படிப்பகம்

www.padippakam.com

கங்களும் இங்கு நுழைய முடியாது; தொழிலாளர்கள் சங்கமாக அணிதிரளவோ போராட முடியாது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் 'அன்னியர்கள்' நுழையவும் முடியாது. உதாரணமாக, ஓசூர் தொழிற்பேட்டையிலுள்ள ஒரு சிறுதொழில் நிறுவனத்துக்குள் நுழைய ஒருவர் அனுமதி பெறவேண்டும்; ஆனால், தொழிற்பேட்டைக்குள் நுழையவே அனுமதி பெற வேண்டும் என்றால், அது இந்திய நாட்டைச் சேர்ந்த பகுதியா அல்லது வேறு நாடா என்று சந்தேகம் வந்துவிடும். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் இந்தியாவில் நிறுவப்பட்டாலும், அவை அன்னிய பிரதேசங்கள்; தனி சமஸ்தானங்கள் என்கிறது அரசு. இந்தியக் குடிமகனாக இருந்தாலும், இந்த சமஸ்தானத்துக்குள் நுழைய அனுமதி - அதாவது, ''விசா'' வாங்க வேண்டும்!

**சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் இந்தியாவில் நிறுவப்பட்டாலும், அவை அன்னிய பிரதேசங்கள்; தனி சமஸ்தானங்கள் என்கிறது அரசு. இந்தியக் குடிமகனாக இருந்தாலும், இந்த சமஸ்தானத்துக்குள் நுழைய அனுமதி - அதாவது, ''விசா'' வாங்க வேண்டும்!**

'அன்னிய' குறுக்கீடுகளற்ற இந்த சமஸ்தானத்திற்கு 1000 ஏக்கருக்கும் குறையாமல் நிலம் ஒதுக்கப்பட வேண்டும் எனும் விதியின் நோக்கமே, அது நிலக்கொள்ளைக்கான ஏற்பாடுதான் என்பதைக் காட்டுகிறது. ஏற்கெனவே மும்பை சாண்டாகுரூசில் 93 ஏக்கர் பரப்பளவில் உள்ள சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 2002-ஆம் ஆண்டில் இயங்கிய ஏறத்தாழ 197 நிறுவனங்கள் இப்போது ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் இல்லாமல், படிப்படியாகக் குறைந்துவிட்டன. 93 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்ட இத்தகைய மண்டலங்களே தொழில் வளர்ச்சியின்றி முடங்கிக் கிடக்கும்போது, 1000 ஏக்கருக்கு மேல் நிலத்தைக் கொடுப்பது ஏன்? பிலிப்பைன்ஸ், மலேசியா, பிரேசில், மெக்சிகோ, கொலம்பியா, சிறீலங்கா, வங்கதேசம் என உலகின் பல நாடுகளில் இத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிறுவப்பட்டு படுதோல்வி அடைந்துள்ள நிலையில், அதை இந்தியாவில் நிறுவுவது ஏன்? விவசாய நிலங்களை அடிமாட்டு விலைக்கு வாங்கி ரியல் எஸ்டேட் திட்டங்கள் மூலம் தரகுப் பெருமுதலாளிகளும் அன்னிய ஏகபோக நிறுவனங்களும் கொள்ளையடிப்பதற்காகவே இத்தகைய மண்டலங்களை நிறுவுவதில் ஆட்சியாளர்கள் போட்டி போடுகின்றனர்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்கச் சுற்றுச்சூழல் பசுமையானதாகவும், தொழிற்சாலைகளுக்கும் அடிக்கட்டுமான சேவைகளுக்கும் தண்ணீர் வசதி நிறைந்ததாகவும் இருக்க வேண்டும் என்று ஏகாதிபத்தியவாதிகள் விதித்துள்ள நிபந்தனையை ஆட்சியாளர்கள் விசுவாசமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இப்பகுதியில் நிலத்தடிநீரை வரைமுறையின்றி உறிஞ்சவும், மூல வளங்களைக் கட்டுப்பாடின்றி அள்ளிச் செல்லவும் தாராள அனுமதி தரப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இம்மண்டலங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் நிலங்களைக் கையகப்படுத்த வேண்டும். தொழிற்சாலை அல்லாமல் வீட்டு மனைக்காக நிலங்களை ஆக்கிரமிப்பதை எதிர்க்கிறோம்'' என்கிறார் காரத்.

''கையகப்படுத்தப்படும் நிலங்களில் 50% இடத்தை தொழிற்சாலைக்கும் 25% இடத்தை அடிக்கட்டுமானத் தேவைக்கும் 25% இடத்தை இதர தேவைகளுக்கும் என வரையறுத்து உரிய சட்டத்திருத்தம் கொண்டு வரவேண்டும்; முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு வரைமுறையின்றி வரிச்சலுகைகள் அளிப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணமும் மறுவாழ்வும் தரப்பட வேண்டும்'' என மனித முகம் கொண்ட சிறப்புப் பொருளாதாரா மண்டலத்தை நிறுவ வேண்டும் என்றும் இல்லையேல் போராடுவோம் என்றும் விளக்குகிறார் காரத். மே.வங்கத்தில் நிறுவப்படும் இத்தகைய மண்டலங்களை முன்மாதிரியாகக் கொண்டு மைய அரசும் பிற மாநில அரசுகளும் செயல்பட வேண்டும் என்றும் உபதேசிக்கிறார்.

முன்மாதிரியாகச் சித்தரிக்கப்படும் மே.வங்க சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் யோக்கியதை என்ன? சலீம் குழுமத்தின் ஆலைகள் மற்றும் அடிக்கட்டுமான தேவைகளுக்காக, விவசாய நிலங்களை மே.வங்க அரசு பறிமுதல் செய்து வருகிறது. ஹூக்ளி மாவட்டத்தில் சங்கூர் அருகே நிறுவப்படவுள்ள டாடா கார் தொழிற்சாலைக்காக இருபோகம் சாகுபடியாகும் நஞ்சை நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதால், அங்கு விவசாயிகள் போராடி வருகிறார்கள். அரசியல் ஆதாயம் கருதி எதிர்க்கட்சியான திரிணாமுல் காங்கிரசு, மே.வங்க அரசின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியதும், அக்கட்சித் தலைவியான மமதாபானர்ஜியை 'இடதுசாரி' அரசு கைது செய்தது. இதைக் கண்டித்து அக்கட்சி சாலைமறியல் - தர்ணா போராட்டம் நடத்த, அதற்கு சோனியாவின் காங்கிரசு ஆதரவு தெரிவிக்கிறது.

மே.வங்க 'இடதுசாரி' அரசோ, ''கையகப்படுத்தப்படும் நிலங்கள் ஒருபோக சாகுபடி செய்யப்படும் மானாவாரி நிலங்கள்தாம். பெரும்பான்மையான விவசாயிகள் நிலத்தை விற்கச் சம்மதித்த பிறகே கையகப்படுத்தியுள்ளோம். இந்நிலங்களுக்கு உரிய விலையும் நிவாரணமும் அளித்துள்ளோம்'' என்று நியாயவாதம் பேசுகிறது.

இப்படித்தான் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும் மாநிலங்களின் ஆட்சியாளர்கள் அனைவரும் விளக்கமளித்து வருகிறார்கள். அரசியல் ஆதாயத்துக்காக எதிர்க்கட்சிகள் விவசாயிகளைத் தூண்டிவிட்டு தேவையற்ற போராட்டம் நடத்துவதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். கடைசியில், தங்கள் ஆட்சி செய்யும் மாநிலத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் உள்ளிட்டு அனைத்து மறுகாலனியாதிக்கக் கொள்கைகளையும் தீவிரமாகச் செயல்படுத்தி நியாயப்படுத்துவது; எதிர்க்கட்சியாக உள்ள மாநிலங்களில் இத்தகைய மண்டலங்கள் - கொள்கைகளுக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தி சவடால் அடிப்பது என்பதே அனைத்து ஓட்டுக் கட்சிகளின் எழுதப்படாத கொள்கையாகிவிட்டது. இக்கொள்கையை போலி கம்யூனிஸ்டுகள் செங்கொடி ஏந்தி நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதுதான் ஒரே வித்தியாசம்.

● பச்சையப்பன்


படிப்பகம்

www.padippakam.com

போகும்; பின்னர் அந்த நிலங்களும் மானாவாரி நிலங்களாக அறிவிக்கப்பட்டு அவையும் இக்கொள்ளையர்களால் சூறையாடப்படும்.

மேலும், இம்மண்டலங்களில் விவசாயத்தை வர்த்தகமாக்கும் உணவுப் பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் செயல்பட தாராள அனுமதி தரப்பட்டுள்ளது. தனி சமஸ்தானத்தில் இயங்குவதாலும், கொள்முதல் செய்யும் பொருட்களுக்கு எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாததாலும், இந்நிறுவனங்கள் செயற்கையான உணவுத் தட்டுப்பாட்டை உருவாக்கி நாட்டையும் மக்களையும் கொள்ளையடிக்க முடியும். ஏற்கெனவே அர்ஜெண்டினாவிலும் ஆப்பிரிக்க நாடுகளிலும் இத்தகைய நிறுவனங்கள் செயற்கையான உணவுப் பஞ்சத்தை உருவாக்கிச் சூறையாடியுள்ளன.

ஏற்கெனவே தனியார்மய - தாராளமயத் தாக்குதலால் விவசாயம் நாசமாக்கப்பட்டு, விவசாயிகள் நிலத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்பட்டு வரும் நிலையில், விவசாயிகளைக் கிராமப்புறங்களிலிருந்து முற்றாக வெளியேற்றும் ஆக்கிரமிப்புப் போரை சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரில் ஆளுங் கும்பல் தொடுத்துள்ளது. நாட்டின் அரைகுறை சுயாதிபத்திய உரிமையையும் ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைத்துவிட்டு மறுகாலனிய சுருக்கை வேகமாக இறுக்கி வருகிறது காங்கிரசு கூட்டணி அரசு. அன்று ஒரு கிழக்கிந்திய கம்பெனி வந்து நாட்டைக் காலனியாக்கியது என்றால், இன்று நூற்றுக்கணக்கான அன்னிய ஏகபோகக் கம்பெனிகள் படையெடுத்து வருகின்றன. இந்தக் காலனிய ஆக்கிரமிப்பை எதிர்த்து, ஒரிசாவின் பழங்குடியின மக்கள் கடந்த ஓராண்டு காலமாகப் போராடி வருகிறார்கள். இன்று, சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிராக நாடெங்கும் விவசாயிகள் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமிக்கும் யூதக் குடியேற்றம், ஈழத்தை ஆக்கிரமிக்கும் சிங்களக் குடியேற்றம் ஆகியவற்றுக்கும், விவசாய நிலங்களையும் புறநகர் சேரிப் பகுதிகளையும் ஆக்கிரமிக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும் வேறுபாடில்லை. மறுகாலனிய ஆக்கிரமிப்பு எனும் உள்நாட்டுப் போரை நம்மீது பிரகடனம் செய்திருக்கிறார்கள் எதிரிகள். போரை, போரினால் எதிர்கொள்வதைத் தவிர வேறென்ன வழி இருக்கிறது?

● கவி

# ஆக்கிரமிப்புக்கு எதிராக விவசாயிகள் போராட்டம்

இந்தியாவின் நுழைவாயில் என சித்தரிக்கப்படும் வர்த்தகப் பெருநகரான மும்பையின் தென்பகுதியில், 12,000 ஹெக்டேர் பரப்பளவில் பிரம்மாண்டமான சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்க மைய அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக நவி மும்பை, ராய்காட் பகுதிகளில் விவசாய நிலங்களை ஆக்கிரமிப்பதற்கான ஏற்பாடுகள் வேகமாக நடந்து வருகின்றன. குறிப்பாக, கொங்கண் பிராந்தியத்திலுள்ள பென், பன்வெல், ஊரன் பகுதியில் 45 கிராமங்களை ஆக்கிரமித்து 25,000 ஏக்கர் பரப்பளவில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை முதற்கட்டமாக நிறுவ அரசு முயற்சித்து வருகிறது.

நில ஆக்கிரமிப்புகள் தொடங்குவதற்கு முன்பாகவே, இவ்வட்டார விவசாயிகள் விழிப்புற்று போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ''மகா மும்பை ஷேத்காரி சங்கர்ஷ் சமிதி'' (அகண்ட மும்பை விவசாயிகள் போராட்ட சங்கம்) என்ற அமைப்பின் கீழ் அணிதிரண்டுள்ள விவசாயிகள் கடந்த 21.9.06 அன்று பெலாபூரில் 40,000 பேருக்கும் மேலாகத் திரண்டு பேரணி - ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். முன்னாள் பிரதமர் வி.பி.சிங், சி.பி.எம். கட்சியின் எச்சூரி, விவசாயத் தொழிலாளர் கட்சியின் தலைவர்கள் முதலானோர் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை மும்பை மட்டுமின்றி, இந்தியாவின் எந்தப் பகுதியிலும் அனுமதிக்க மாட்டோம் என்று விவசாயிகள் சூளுரைத்துள்ளனர்.



மகாராஷ்டிராவில் அமையவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலத்தை எதிர்த்து மகா மும்பய் ஷேத்காரி சங்கர்ஷ் சமிதி அமைப்பைச் சேர்ந்த விவசாயிகள் நடத்திய பேரணி - ஆர்ப்பாட்டம்.

சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரில் விவசாய நிலங்களை ஆக்கிரமிக்க வந்துள்ள முகேஷ் அம்பாணியின் ரிலையன்ஸ் நிறுவனம், இப்பகுதியில் மருத்துவமனை மற்றும் இதர சேவைகளைச் செய்யப் போவதாகவும், அனைத்து கிராம மக்களுக்கும் வேலைதரப் போவதாகவும் மக்களிடம் ஆசை காட்டி போராட்டத்தை நீர்த்துப் போகச்செய்ய முயற்சித்து வருகிறது. இதை அம்பலப்படுத்தி, பல்வேறு அமைப்புகள் விவசாயிகளிடம் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தையும் வீதி நாடகங்களையும் கிராமந்தோறும் நடத்தி வருகின்றன. போராட்டத்திற்கான ஆயத்தப் பணிகளைச் செய்து வருகின்றன.



படிப்பகம்


www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி**

விலைக்கு வாங்கியும் அரசு தரிசு நிலங்களை வளைத்துப் போட்டும் உருவாக்கப்படும் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மூலம் நிலம், நீர், மின்சாரம், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அந்நிய பன்னாட்டுத் தொழில் கழகங்களும், உள்நாட்டு ஏகபோக தரகு முதலாளிகளும் தாராளமாகக் கொள்ளையடிப்பதற்காக ஏற்பாடுகள் செய்து தரப்படுகின்றன. தொழில், உற்பத்திப் பெருக்கம், வேலை வாய்ப்புகளுக்கானவை என்று கூறிக் கொண்டாலும், அந்நிய - உள்நாட்டு ஏகபோகங்கள் வீடு-வீட்டு மனைத் தொழில், அடுக்குமாடிக் குடியிருப்புகள், மருத்துவமனைகள், பேரங்காடிகள், கணினிகளை வைத்து அந்நிய தொழில் வர்த்தக - வங்கிகளுக்கான விவர வேலைகள் (பி.பி.ஓ. மற்றும் கால் சென்டர்) நடத்திக் கொள்ளையடிப்பதும் பெருமளவு நடக்கவுள்ளன.

நிலச் சீர்திருத்தத்தை அமலாக்கும் புரட்சி செய்து விட்டதாகப் பீற்றிக் கொள்ளும் 'இடது சாரிகள்' ஆளும் மேற்கு வங்கம், கேரளா உட்பட நாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள அமைப்பதற்காக விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்படுவதும், விவசாயிகளிடையே அதற்குக் கடும் எதிர்ப்பும் போராட்டங்களும் வெடிப்பதும் நடக்கின்றன. அவற்றையும் மீறி, சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக கையகப்படுத்தப்படுவதில் 10 சதவீதத்துக்கும் மேலாக விவசாய விளைநிலங்கள் இருக்கக் கூடாது என்ற வரம்பையும் உலக வங்கி நிர்ப்பந்தத்தால் மத்திய அரசு நீக்கிவிட்டது. ஆனால், இங்கே தமிழகத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவும் தி.மு.க. அரசின் விரைவான முயற்சிக்கு ஒரு சிறு முணுமுணுப்போ, எதிர்ப்போ இல்லை, இதில் கருணாநிதி - ஜெயலலிதா, போலி கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். நாளுக்கு ஒன்று வீதம் கருணாநிதியும், மாறனும் அந்நிய பன்னாட்டு கழகங்கள் மற்றும் டாடா, ரிலையன்ஸ், அம்பானி போன்ற உள்நாட்டுத் தரகு முதலாளிகளையும் வரவேற்று தொழில்கள் - வர்த்தகங்கள் தொடங்குவதற்கான ஒப்பந்தங்கள் போடுகின்றனர்.

கருணாநிதி அரசு ஒருபுறம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தரிசு நிலங்களை மேம்படுத்தி இலவச நில ஒதுக்கீடு; மறுபுறம், ஏராளமான விவசாய விளைநிலங்களை கையகப்படுத்தி சகல வசதிகளோடு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைத்து அந்நிய மற்றும் உள்நாடு ஏகபோகங்களுக்குத் தாரை வார்ப்பது எனும் இவ்விரண்டைப் பார்க்கும்போது பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று நாடகமாடுகிறதோ அல்லது நிலமளிப்பு உட்பட பல கவர்ச்சி - இலவச திட்டங்கள் மூலம் அந்நிய - உள்நாட்டு ஏகபோகங்களுக்குச் சேவை செய்வதை மூடி மறைத்து - திசை திருப்ப எத்தணிக்கிறதோ என்று பலவாறு எண்ணத் தோன்றும்.



> **உலகிலுள்ள நாடுகளின் தலைநகரங்களில் மட்டுமே கிளைகளைக் கொண்டுள்ள உலகவங்கி, உலகிலேயே தலைநகருக்கு வெளியே சென்னையில் மட்டும்தான் தலைமைக் கிளையை நிறுவியுள்ளது என்று கூறி, அதற்குரிய புதிய வளாகத்தைத் திறந்து வைத்து, "மக்கள் நலனுக்கான" 7,211 கோடி ரூபாய் உலகவங்கி நிதி பெறும் ஐந்து திட்டங்களை வெற்றிகரமாக அமலாக்கி வருவதாக பெருமையடித்துக் கொண்டார், கருணாநிதி. அவற்றில் தி.மு.க.வின் இலவசக் கவர்ச்சி திட்டங்களும் அடங்கும்.**

ஆனால், கருணாநிதி கட்சியும் அரசும் அறிவித்துச் செயல்படுத்தும் இலவச-கவர்ச்சித் திட்டங்கள் அனைத்துமே உலகவங்கி, ஐ.எம்.எஃப்., உ.வ.கழகம் ஆகியவை மூலம் ஏகாதிபத்தியங்கள் புகுத்தும் புதிய பொருளாதாரக் கொள்கையின் திருத்தப்பட்ட மறுகாலனியாக்கக் கொள்கைகள்தாம். மலிவான, திறன்மிக்க உழைப்பாளர்களை உருவாக்கும் மனிதவள, இயற்கை வள மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நுண்பொருளாதாரத் திட்டங்கள் ஆகிய வகையினங்களில் மறுகாலனியாக்கக் கொள்கைகளைத்தான் கருணாநிதி அரசு தனது சொந்தப் பங்களிப்புகளாகப் பீற்றிக் கொள்கின்றது. இத்தகைய கொள்கைகளை முழுக்கவும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களை வைத்துச் செயல்படுத்த முயன்று தோற்றுப் போய், இப்போது அரசு மூலமாக கொண்டு வரப்படுகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்கள், சுனாமி - வெள்ள நிவாரணம் என்ற பெயரில் ஜெயலலிதா காலத்திலேயே இவ்வாறு வாரி இறைக்கப்பட்டது. மறுகாலனியாக்கத் திட்டங்களை தமது அரசியல் ஆதாயங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதில் ஜெயலலிதாவை கருணாநிதி விஞ்சி விட்டார் என்பதுதான் உண்மை. ●



படிப்பகம்

www.padippakam.com



## சட்டங்கள், ஆணையங்கள், நடுவர் மன்றங்கள், திட்டங்கள்...

# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் - ஆணையம்.
- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் - ஆணையம்.
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - நடுவர் மன்றங்கள்.
- வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் - சிறப்பு நீதிமன்றங்கள்.
- குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம்.
- வேலை உத்திரவாத அடிப்படை உரிமைச் சட்டம்.
- குழந்தைகள் உழைப்புத் தடுப்பு மற்றும் ஒழுங்குமுறை 1986 சட்டம் - 2006-ஆம் ஆண்டு தடை ஆணையம்.
- தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினர் மற்றும் பிற்பட்டோர் இட ஒதுக்கீடு.
- தாழ்த்தப்பட்டோர் - பழங்குடி மக்கள், மகளிர், சிறுபான்மையினர் நல ஆணையங்கள்.
- பழங்குடி மக்கள் வன உரிமைச் சட்டம்.

''அடேயப்பா'' — எத்தனை சமூக நீதி உரிமைகள் - சட்டங்கள், சமூகநலத் திட்டங்கள்!

இத்தனையும் பார்க்கும்போது, இந்த நாடும் அரசும் தான் உலகிலேயே ஏழை-எளிய, ஒடுக்கப்பட்ட மக்கள் நலன்களில், ஜனநாயகத்தில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளன என்று வியந்து போய்விடுவோம்!

ஆனால், சம்பந்தப்பட்ட மக்கள் எந்த அளவு இந்த உரிமைகளை அனுபவித்திருக்கிறார்கள், இந்தச் சட்டங்களால் பயன்பட்டிருக்கிறார்கள், இந்தத் திட்டங்களால் நன்மை பெற்றிருக்கிறார்கள் என்று அவற்றின் நேர்மறையான விளைவுகளை மதிப்பீடு செய்து தொகுத்தறியும் போது ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது.

இந்தச் சட்ட-திட்டங்கள் ஒவ்வொன்றும் அவற்றின் நோக்கங்கள், அவசியம் குறித்த முகப்புரையோடுதான் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் இந்த முகப்புரை வெறும் சொல்லலங்காரம் தானே தவிர, நடைமுறைக்கானதே கிடையாது என்பது அவற்றை வரைபவர்கள் நன்கறிவர்.

•••

### மனித உரிமைகள் பாதுகாப்பு என்ற பம்மாத்து!

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சாசனத்தில் கையொப்பமிட்டு, அங்கீகாரம் வழங்கியிருப்பதோடு, மனித உரிமையின் இன்றியமையாமையை ஏற்றுக் கொண்டிருக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

ஆனால், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்றாகப் பீற்றிக் கொள்ளும் இந்த நாடுதான் மனித உரிமையை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கும் சட்டமியற்றி, அமலாக்குவதற்குப் பல ஆண்டுகளாக மறுத்து வந்தது.

இந்தியாவில் காலனி ஆட்சிக் காலத்தில் இருந்தே வழக்கமாக இருந்து வரும் போலீசு கொட்டடி (லாக்-அப்) சித்திரவதை, போலீசு நிலையக் கற்பழிப்புகள், படுகொலைகள் ஆகியவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று, ''போலீசுடன் மோதல்'' என்கிற பெயரில் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் நிராயுதபாணிகளாகப் பிடித்துச் சுட்டுக் கொல்லப்படுவது 1960-களின் இறுதியில் இருந்து தொடங்கியது.

1970-களின் தொடக்கத்தில் மேற்கு வங்கம் மற்றும் பீகாரில் சிறைச் சாலைச் சித்திரவதைகளும் படுகொலைகளும் ஏராளமாக நடந்தன. அதன் விரிவாகவும், தொடர்ச்சியாகவும் 1975-77-ஆம் ஆண்டுகளில் அவசர நிலை பாசிச ஆட்சியில் ஆயிரக்கணக்கான அரசியல் போராளிகள் சிறையிலடைக்கப்பட்டுச் சித்திரவதைக்கு ஆளாகி, நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டனர். கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடு - அறுவைச் சிகிச்சை முதல் நகர்ப்புற குடிசைகள் இடிப்பு வரை அரசியல் செயல்வீரர்கள் - போராளிகள் மட்டுமல்ல, சாதாரண ஏழை-எளிய மக்களின் வாழும் உரிமைகள் கூடப் பறிக்கப்பட்டன.

இந்தியாவில் பெருமளவில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் முதன் முறையாக அப்பொழுதுதான் உலக அளவில் வெளிச்சத்துக்கு வந்தன. அது வரை, உலக மனித உரிமைகளை மதிக்கும் ஆன்மீகநெறி மிக்க ஜனநாயக நாடென்று முதலாளித்துவ - ஏகாதிபத்திய நாடுகளின் நன்மதிப்பை பெற்றதாக இந்தியா கருதப்பட்டது. அவசர நிலைப் பிரகடனத்

பல ஆண்டுகாலப் போராட்டத்திற்குப் பிறகு, அத்தியூர் விஜயா பாலியல் வன்புணர்ச்சி வழக்கில் தண்டிக்கப்பட்ட போலீசார் (முகத்தை மூடியிருப்பவர்கள்). உள்படம்: விஜயா.





படிப்பகம்

துக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே நக்சல்பாரிப் புரட்சியாளர்களை போலீசுடன் மோதல் என்ற பெயரில் படுகொலைகள் செய்ததையும் அந்நாடுகள் கண்டுகொள்ளவில்லை.

பஞ்சாப், அசாம், காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் பிரிவினைவாத - தீவிரவாத - பயங்கரவாத இயக்கங்களை ஒடுக்குவது என்ற பெயரில் அரசு பயங்கரவாதம் 1980-களில் கட்டவிழ்த்து விடப்பட்டது. நாட்டின் பல இடங்களில் இராணுவத்திடமும் துணை இராணுவத்திடமும் நேரடி அதிகாரம் அளிக்கப்பட்டது. சமூக விரோதிகள், தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற பெயரில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படுகொலைகள் செய்யப்பட்டனர். அரசு பயங்கரவாதச் சட்டங்கள் அவற்றுக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கின. பயங்கரவாத முத்திரைக் குத்தி சுமார் ஒரு இலட்சம் பேர் (7 வயது சிறுவர்கள் முதல், 65 வயதுக்கும் மேலான மூதாட்டிகள் வரை) பல ஆண்டுகள் சிறையிலடைக்கப்பட்டனர்.

''இந்திய அரசியல் நிர்ணயச் சட்டப்படி அவசரநிலை ஆட்சியைப் பிரகடனப்படுத்தி விட்டால் (1975-இல் பாசிச இந்திரா அரசு இதைச் செய்தது). மனிதர்கள் உயிர்வாழும் உரிமையைக் கூடப் பறித்து விடும் அதிகாரம் இந்திய அரசுக்கு உண்டு'' என்று இந்த நாட்டின் உச்சநீதி மன்றம் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறது. அவசரநிலைப் பிரகடனப்படுத்தப்பட்ட ஆட்சியின் கீழ் ஒரு போலீசு ஆய்வாளர் தன் சொந்தப் பகையின் காரணமாக, ஒரு குடிமகனைச் சுட்டுக் கொன்று விடுவதற்குக் கூட அனுமதி உண்டு என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நாட்டில் மனித உரிமை என்பது வெறும் கேலிக் கூத்தாக இருப்பதில் வியப்பில்லை.


அப்போது அமெரிக்க மேல்நிலை வல்லரசின் நேரடி மேலாதிக்கத்தின் கீழ் இருந்த பல நாடுகளில் பாசிசக் கொடுங்கோன்மை ஆட்சி நடந்தபோதும் அது கண்டு கொள்ளவில்லை. அதேசமயம், அப்போது ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கில் நீடித்திருந்த நாடுகளையும், அமெரிக்க நேரடி மேலாதிக்கத்துக்கு வெளியிலிருந்த நாடுகளையும், மனித உரிமை மீறல்களைக் காட்டி உருட்டி மிரட்டி நிர்பந்தித்துத் தனது பிடிக்குள் கொண்டு வருவதற்குரிய ஆயுதமாக அது கையிலெடுத்தது. இந்தியா உட்பட உலகின் பல நாடுகளிலும் நடக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றி சர்வதேசப் பொதுமன்னிப்பு மற்றும் பிற அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் ஆய்வறிக்கைகள் அதற்குப் பயன்படுத்தப்பட்டன.

இந்தியாவில் மனித உரிமை மீறல்களே கிடையாதென்று அடியோடு மறுத்த இந்திய அரசு, இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக குற்றஞ்சாட்டி ஐ.நா. குழு உட்பட வேறு எந்த வெளிநாட்டு நிறுவனங்களின் நேரடி ஆய்வுகளுக்கும், அனுமதியும் மறுத்தது. ஆனால், அதிகரித்து வந்த மனித உரிமை மீறல்களைப் பற்றிய செய்திகள் குவிந்த வண்ணமிருந்தன.

இந்த நிலையில்தான் இந்த நாட்டில் நடந்து வரும் மனித உரிமை மீறல்களைத் தானே கண்காணித்துத் தடுக்கவும், நடவடிக்கை எடுக்கவும் தேவையான அமைப்பு முறைகளை ஏற்படுத்திக் கண்துடைப்பு நாடகமாடும் வேலையிலும் இந்திய அரசு இறங்கியது. அதன்படி 1993-இல் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்திய அரசின் ஆயுதந்தாங்கிய உறுப்புகளான போலீசு, துணை-இராணுவம், இராணுவம் முதலியவைதாம் மனித உரிமைகளைப் பறிக்கும் குற்றங்களை இழைக்கும் முக்கிய அமைப்புகள். இந்த மனித உரிமை மீறல்களைக் கண்டுபிடித்துத் தானே தண்டிக்கப் போவதாக இந்திய அரசே சட்டமியற்றி அமலாக்குவது என்பது எவ்வளவு பெரிய பித்தலாட்டம்!




மணிப்பூர் மாநிலத்தில் இராணுவம் நடத்தி வரும் பாலியல் வன்புணர்ச்சி அத்துமீறல்களைக் கண்டித்து நடந்த தாய்மார்களின் நிர்வாணப்போராட்டம். (கோப்புப் படம்)




காலனிய ஆட்சிக் காலத்திலிருந்தே மனித உரிமைகளைக் கொஞ்சமும் மதிக்காத பல்வேறு கொடுங்கோன்மைச் சட்டங்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. அவற்றுள் ஒன்று, பிரிட்டிஷ் அரசாட்சியை தூக்கி எறிவதற்கான சதி செய்ததாகப் புனையப்படும் ராஜ துரோகக் குற்றச் சட்டம் **(120B)**. இது இப்போதும் அரசு துரோகக் குற்றச் சட்டமாக கருதி, அரசியல் இயக்கங்கள் மீது ஏவிவிடப்படுகிறது. மற்றொன்று இந்தியப் பாதுகாப்புச் சட்டம் **(Defence of India Rules)**. காஷ்மீர், வடகிழக்கு இந்தியா போன்ற பகுதிகளில் சந்தேகத்துக்குரிய நபர்களை சுட்டுக் கொல்லவும், அதற்குக் காரணமான அரசு வன்முறை அமைப்பு அதிகாரிகளுக்குச் சட்டப் பாதுகாப்புத் தரவும் பல கொடிய சட்டங்கள் உள்ளன.

இவைதவிர மிசா, மினி மிசா, தடா, பொடா என்று அவ்வப்போது நிறைவேற்றப்படும் அரசு பயங்கரவாதச் சட்டங்கள், மாநில அளவில் ஏவிவிடப்படும் குண்டர்கள் சட்டங்கள் போன்றவை; சுவரெழுத்து, சுவரொட்டி, ஊர்வலம், பொதுக் கூட்டம் ஆகியவற்றுக்குக்கூட தடை விதிக்கும் போலீசு அராஜகம்; பயங்கரவாதி, சமூக விரோதி, தீவிரவாதி, நக்சலைட்டு என்று முத்திரை குத்தி போலீசுடன் மோதல் என்ற பெயரில் கேட்பாரின்றி சுட்டுக் கொல்வது — இப்படி அரசு வன்முறை அமைப்புகளிடம் வரைமுறையற்ற அதிகாரம் குவிக்கப்பட்டிருக்கிறது. மனித உரிமைகளை மீறுவதற்கென்றே தனிப்பயிற்சி பெற்ற இரகசிய உளவு - கொலைப் படைகள் **(ATS, Q, STF, GREYHOUND)** என்று பல பெயர்களில் உள்ளன. அதற்கென்றே இரகசிய சித்திரவதைக் கூடங்களும், நவீன கருவிகளும், ஆயுதங்களும், கணக்கற்ற நிதியும் வழங்கப்படுகின்றன. இத்தனையும் இருக்கும்போது மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் - ஆணையங்கள் என்ன செய்துவிட முடியும்!

சமீபத்தில் பேசிய உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி சபர்வால் ''மாநில மனித உரிமை ஆணையங்களை உருவாக்குவதில் மாநில அரசுகள் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கின்


படிப்பகம்



றன. மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1993-இல் இயற்றப்பட்டு, கடந்த 13 ஆண்டுகளில் 14 மாநிலங்களே மனித உரிமை ஆணையங்கள் அமைத்துள்ளன. இன்னமும் எஞ்சிய 17 மாநிலங்களில் மனித உரிமை ஆணையங்களை அமைப்பதற்கான எந்தவித முயற்சியும் கிடையாது. ஆணையங்கள் அமைக்கப்பட்ட மாநிலங்களிலும் நான்கில் முழுநேரத் தலைவர்கள் இல்லை. காலியாகவே இருக்கின்றன அல்லது பகுதிநேர மற்றும் தற்காலிக தலைவர்கள்தாம் உள்ளனர். மகாராட்டிரத்தில் மாநில மனித உரிமை ஆணையம் செயலிழந்து போய்விட்டது. மனித உரிமைகளைக் காப்பதில் அரசாங்கங்கள் உண்மையில் அக்கறை கொண்டிருக்கின்றனவா? மனித உரிமைகள் பற்றிய வரையறுப்பு கூட இன்னமும் செய்யப்படவில்லை'' என்கிறார்.

''மாநில மனித உரிமைகள் ஆணையங்களுக்கான வழிகாட்டுதல்களை தேசிய மனித உரிமைகள் ஆணையம் வகுக்க வேண்டும். மாவட்ட மற்றும் வட்ட அளவிலான மனித உரிமை அதிகார அமைப்புகளை நிறுவவேண்டும். பல்வேறு நலத்திட்டங்கள் பொதுமக்களைச் சென்றடைகின்றனவாவென்று மாநில ஆணையங்கள் உறுதிப்படுத்த வேண்டும். போலீசு நிலையக் கொட்டடிகளில் நடக்கும் அதிக்கிரமங்களை மட்டும் மனித உரிமை மீறல்களாகக் கருத முடியாது. சுத்தமான குடிநீரும் காற்றும் கிடைக்காததும், சுகாதாரம், குறைந்தபட்ச சத்துணவு கிடைக்காததும் கூட மனித உரிமை மீறல்கள்தான்'' என்று சபர்வால் கூறினார்.

இம்மாதிரி வழக்குகளிலும், கருத்தரங்குகளிலும் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி, 'குடி'அரசுத் தலைவர், பிரதமர் போன்றவர்கள் ஆவேசமாகப் பேசுவதும், ஆலோசனைகள் வழங்குவதும் ஒன்றும் புதிதில்லை. பழங்குடி மக்களின் குழந்தைகள் சத்துணவின்றி மடிவதும், பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் இசுலாமிய இளைஞர்கள் வேட்டையாடப்படுவதும் பெருமளவு நடக்கும் மகாராட்டிரத்திலேயே மனித உரிமை ஆணையம் காயடிக்கப்பட்டு விட்டது; அந்நிய - பன்னாட்டுக் கம்பெனிகள் குளிர்பானங்கள் என்ற பெயரில் பூச்சிக் கொல்லி நஞ்சு கலந்து விற்பனை செய்கின்றன - இதெல்லாம் அந்தப் பெரிய மனிதர்கள் அறியாதவை அல்லவே? இருந்தாலும் இந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு முதலாவதாக அதை அமலாக்குவதற்குரிய ஆணையம் அமைத்த மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு. ஆனால், அதை முடக்கி வைப்பதில்தான் தமிழக அரசு கூடுதலான அக்கறையெடுத்துக் கொண்டது. பெரும்பாலும் ஆட்சியாளர்களின் நம்பகமான விசுவாசிகளே மனித உரிமை ஆணையத்தின் தலைமைக்கு நியமிக்கப்பட்டனர். ஆணையம் செயல்படுவதற்குரிய அதிகாரிகள், அலுவலர்கள், இடம், நிதி போன்ற வசதிகள் செய்து தரப்படவில்லை.

தமிழக மனித உரிமை ஆணையத்தின் தலைவராக இருந்த நைனார் சுந்தரம் 2001-ஆம் ஆண்டு செப்டம்பரில் இறந்து போனார். அதன்பிறகு சுமார் ஐந்தாண்டு காலம் பாசிச ஜெயலலிதா ஆட்சியில் மனித உரிமை ஆணையத்துக்குத் தலைவரே நியமிக்கப்படவில்லை; ஐவர் இருக்க வேண்டிய ஆணையத்தில் ஒருவர் மட்டுமே உறுப்பினராக இருந்தார். அவரும் கொடைக்கானல் ஓட்டல் வழக்கில் ஜெயலலிதாவுக்குத் தண்டனை வழங்கிய நீதிபதி சம்பந்தம் என்பதால் அவர் மட்டுமே இயங்கிய ஆணையத்தின் மனித உரிமை மீறல் மீதான தீர்ப்புகளை ஜெயலலிதா அரசு மதிக்கவே இல்லை. அவரையும் நீக்கவிடத்தான் ஜெயலலிதா அரசு எத்தணித்தது. அவரும் ஓய்வு பெற்றபிறகு வேறு யாரையும் நியமிக்கவும் இல்லை. 'டான்சி' ஊழல் வழக்கில் ஜெயலலிதாவுக்குச் சாதகமான தீர்ப்பு வழங்கிய, சிங்கப்பூர் சுற்றுலா புகழ் நீதிபதி தங்கராஜ் தற்காலிகத் தலைவராக கடைசி சில மாதங்கள் நியமிக்கப்பட்டிருந்தார்.

மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவும், மனித உரிமை ஆணையத்தை முடக்கி வைப்பதும்தான் அரசின் செயல்பாடாக உள்ளதென்று கருதுவதற்கு வேறென்ன சான்று வேண்டும். ஒரு எலும்புக் கூடுபோல ஆகிவிட்ட மாநில மனித உரிமை ஆணையம் வழங்கும் தீர்ப்புகளும் என்ன கதியாக்கப்படுகின்றனவென்பதற்கு ஒரு எடுத்துக்காட்டுப் பார்ப்போம்.

சென்னை, தாம்பரம் அருகேயுள்ள கடப்பேரியில் தமிழக அரசின் வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் திறந்து கிடந்த கழிவுநீர்த் தொட்டியில் ஏழு வயதுச் சிறுவன் விழுந்து இறந்து போனான். அதற்கு ஈட்டுத் தொகையாக ஐம்பதாயிரம் ரூபாய் தரும்படி மாநில மனித உரிமை ஆணையம் ஆணையிட்டது. மூன்றாண்டுகள் ஆகியும் சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்கள் ஈட்டுத் தொகை வழங்கவில்லை. இறந்து போன சிறுவனின் தந்தை ஒரு ஆட்டோ ஓட்டுநர். தற்போது வாத நோய் தாக்கிச் செயலிழந்து கிடக்க, தாய் வீட்டு வேலை செய்து குடும்பம் பிழைக்கிறது. மீண்டும் நியாயம் கேட்டுப் போன அந்த ஏழைக் குடும்பத்தை உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போடும்படி வழிகாட்டியிருக்கிறது, மனித உரிமை ஆணையம். இவ்வளவுதான்

**வீரப்பனைத் தேடுவது என்ற போர்வையில், சிறப்பு அதிரடிப் படையால் சித்திரவதை செய்யப்பட்ட பழங்குடியின மக்களுள் ஒரு பகுதியினர். (நன்றி: இந்தியா-டுடே).**



www.padippakam.com

அதற்கு அதிகாரம். இப்படி ஏராளமான சான்றுகள் கூற முடியும்.


மக்களுடைய அடிப்படைத் தேவைகள் கிடைக்கின்றனவா, மக்கள் நலத் திட்டங்கள் அவர்களைச் சென்றடைகின்றனவா என்று கண்காணிப்பது கூட மனித உரிமை ஆணையத்தின் பணிகள் தான் என்கிறார் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி. ஆனால் இத்தகைய பணிகளை விட்டுவிடுங்கள், மனிதர்கள் உயிர் வாழும் உரிமையைக் கூட கையிலெடுத்து உத்திரவாதப்படுத்த முடியாமல் மனித உரிமை ஆணையங்கள் முடக்கப்படுகின்றன என்பதுதான் உண்மை.

1975-ஆம் ஆண்டு, நக்சல்பாரிப் புரட்சியாளர் சீராளன் போலீசால் கைது செய்யப்பட்டு மரத்திலே கட்டி வைத்து நுகத்தடியாலேயே அடித்துக் கொல்லப் பட்டார். முப்பதாண்டுகளுக்கு மேலாகி 2006-ஆம் ஆண்டு அதற்குரிய நட்டஈடு வழங்கும்படி உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கூறியது. 1980-களின் தொடக்கத்தில் வடாற்காடு - தருமபுரி மாவட்டங்களில் போலீசுக் கொலைகாரன் தேவாரம் கும்பலால் பல இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்; அவற்றுக்கு எதிரான வழக்குகள் விசாரிக்கப்படாமலேயே முடக்கப்பட்டன. அதே தேவாரம் கும்பலால் சந்தன மரக் கடத்தல் வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் மலைவாழ் மக்கள் சித்திரவதை - கற்பழிப்பு - படுகொலை செய்யப்பட்டனர். இந்த மனித உரிமை மீறல்களை விசாரித்த சதாசிவம் கமிசன் அறிக்கை எவ்வித மேல் நடவடிக்கையும் இன்றி கிடப்பில் போடப்பட்டது. ஆனால், வீரப்பனைக் கொன்றதற்காக தேவாரம் - விஜயகுமார் கும்பலுக்கு உடனடியாக வீட்டுமனை, பரிசுத் தொகை, பதவி உயர்வு கொடுத்துப் பாராட்டப்பட்டது. சிதம்பரம் பத்மினி, அத்தியூர் விஜயா போன்ற பெண்களுக்கு எதிரான போலீசின் பாலியல் வன்முறைகள், ஏராளமான கொட்டடிக் கொலைகள், வாச்சாத்தி மற்றும் சின்னாம்பதி பெண்கள் மீதான அரசு ஊழியர் - போலீசு கும்பல் பாலியல் வன்முறை வெறியாட்டம் போன்றவை மனித உரிமை ஆணையத்தால் கண்டு கொள்ளப்படவே இல்லை. காட்டுமிராண்டி ஆட்சி நடத்தும் குஜராத் நரேந்திரமோடி போன்றவர்கள் மனித உரிமை ஆணையத்தின் தீர்ப்புகளை கழிப்பறைக் காகிதமாகத்தான் மதிக்கிறார்கள்.

பெரும்பாலும் ஆளும் கட்சிகளின் எடுபிடிகள் என்று நிரூபித்துக் கொண்ட ஓய்வு பெற்ற நீதிபதிகள்தாம் மனித உரிமை ஆணையத்தின் தலைவர்களாக நியமிக்கப்படுகிறார்கள். தமது பதவிக் காலத்தில் மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்த போலீசு அதிகாரிகளே மனித உரிமை ஆணையத்தின் துணை உறுப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். ராஜீவ்காந்தி கொலையை விசாரிப்பது என்ற பெயரில் பாசிச அதிகார வெறியோடு செயல்பட்டவரும், பின்னர் சி.பி.ஐ. இயக்குநராக பதவிப் பரிசு பெற்றவருமான கார்த்திகேயன், ஓய்வு பெற்ற பின்னர், தேசிய மனித உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் போலீசு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

ஆக, மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரலெழுப்புபவர்களையும், அவர்களது நடவடிக்கைகளையும் அரசு அமைப்புகளுக்குள்ளும் அதன் சட்ட திட்டங்கள் செயல்பாடுகளுக்குள்ளும் இழுத்துக் கடிவாளம் போடுவதுதான் இந்த மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கம். இதன் மூலம் மனித உரிமைகள் மீறப்படும்போது அதைத் தடுப்பதும் அதற்குரிய நிவாரணத்தையும் இந்த அரசமைப்புக்குள்ளேயே பெற முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுத்தப்படுகிறது. இந்த அரசுக்கு எதிரான கொந்தளிப்புகளைச் சீர்படுத்தும் அதிர்ச்சித் தடுப்புகளாக இந்தச் சட்டமும் அதன் அமைப்புகளும் செயல்படும். அவை இந்த அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான உணர்வுகளுக்கு வடிகாலாக அமையும். இதற்கு மேலும் துணை புரியும் வகையில் மனித உரிமை மீறல்களைத் ''தட்டி கேட்க''வும், அதற்கு எதிரான மக்கள் உணர்வுகளை நெறிப்படுத்தி சட்ட வரம்புகளை மீறாமல் பார்த்துக் கொள்ளவும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஏகாதிபத்திய நிதி உதவியுடன் இயங்குகின்றன.

மனித உரிமைக் கண்காணிப்பகம் (Human Rights Watch), மக்கள் சிவில் உரிமைச் சங்கம் (People's Union for Civil Liberties) சர்வதேசப் பொதுமன்னிப்பு (International Amnesty) போன்ற அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஏகாதிபத்திய அமைப்புகளால் நிதி உதவியளிக்கப்படுவதோடு, கிரமமான அறிக்கைகள் பெற்று மேற்பார்வையிடப்படுகின்றன. இந்த நாட்டில் மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் போலீசு முதலிய அரசின் வன்முறை அமைப்புகளுக்கு எதிராக வெற்றுக் கூச்சல் போடுவதுதான் இந்த மனித உரிமை அமைப்புகளின் வேலை. ஜனநாயக வரம்புக்குட்பட்ட



போராட்டங்கள் என்ற பெயரில் அரசின் வன்முறை அமைப்புகளுக்கு எதிராக நிழல் சண்டை போடுவதன் மூலம், ஒரு சில கண்துடைப்பு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்து, அவற்றுக்கு எதிரான மக்கள் உணர்வுகளை மழுங்கடிக்கின்றன.

''மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் இருக்கின்றன, அமைப்புகள் இருக்கின்றன, மக்கள் தாம் இவற்றை அறிந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால், மக்கள் பாமரர்களாக இருக்கிறார்கள்; மனித உரிமை பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்பட வேண்டும், அதற்குரிய கல்வி போதிக்கப்பட வேண்டும்'' என்று இந்தத் தொண்டு நிறுவனங்கள் கூறி வருகின்றன. மக்கள் தமது அரசியல், பொருளாதாரத் தேவைகளை அறிவதோடும் அவற்றை அடைவதற்கான போராட்டங்களோடும் நெருங்கிய பிணைப்புக் கொண்டுள்ளதுதான் மனித உரிமை. ஆனால், இந்தத் தொண்டு நிறுவனங்களோ அரசியல், பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான இயக்கங்கள் - நோக்கங்களுக்கும் தமக்கும் எவ்வித உறவும் கிடையாது என்று வேண்டுமென்றே வரம்பிட்டுக் கொள்கின்றன.

அரசின் நிர்வாக இயந்திரத்துடன் ஒரு புரிந்துணர்வு அடிப்படையில்தான் இந்த மனித உரிமைத் தொண்டு நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஆனால், உள்ளூர் அளவில் அதிகாரம் செலுத்தும் போலீசு அதிகாரிகளின் அதிகார வெறி காரணமாக சில ''மோதல்கள்'' ஏற்படுகின்றன. இவை தங்களின் வீரதீரச் செயல்கள் என்று மேற்படி தொண்டு நிறுவனங்கள் பீற்றிக் கொள்கின்றன.

ஆக, மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம், அதை அமலாக்குவதற்காக நிறுவப்படும் (பல மாநிலங்களில் அப்படி ஒரு ஏற்பாடே கிடையாது) ஆணையங்கள் மட்டுமல்ல, மனித உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் ஏகாதிபத்திய நிதி உதவி பெறும் தொண்டு நிறுவனங்களும் கூட மனித உரிமை மீறல்களுக்கு மறைமுகமாகத் துணை நிற்பவைதாம்.

**(தொடரும்)**



படிப்பகம்

# வந்தே மாதரம்:

# எட்டப்பர்களின் தேசபக்தி பஜனை!

சக மனிதர்களைக் கூட நம்ப மறுக்கும் அளவிற்கு நாட்டு மக்களை நிரந்தர பயத்தில் ஆழ்த்துவதற்காக ''முஸ்லீம் பயங்கரவாதம், குண்டு வெடிப்பு, முக்கிய தலைவர்களைக் கொல்ல தீவிரவாதிகள் சதி'' என்ற வழக்கமான பீதியை மீண்டும் ஒருமுறை அனைத்து ஊடகங்களும் ஆகஸ்ட் 15-ஐ முன்னிட்டு உரக்கச் சொல்லி ஓய்வதற்குள், அடுத்து கல்லா கட்ட ஆரம்பித்து விட்டது ''தேசபக்தி'' பஜனையும் அதை யொட்டிய லாவணிக் கச்சேரிகளும்.

மைய அமைச்சர் அர்ஜுன் சிங், 'வந்தே மாதரம்' பாடலின் நூற்றாண்டு விழாவினை முன்வைத்து, செப்டம்பர் ஏழாம் தேதியன்று நாட்டிலுள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் கட்டாயமாக 'வந்தே மாதரம்' பாட வேண்டும் என்று சுற்றறிக்கை ஒன்றை அனுப்பினார். அதைத் தொடர்ந்து, தேச பக்தியை ஒட்டுமொத்தக் குத்தகைக்கு எடுத்துள்ள பா.ஜ.க. கும்பல், பாட மறுப்பதை தேசத் துரோகமாகச் சித்தரித்து, சிறுபான்மையினருக்கு எதிரான தனது வழக்கமான அவதூறுப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டது. தான் ஆளும் மாநிலங்களில் இப்பாடலைப் பாடவேண்டியது கட்டாயம் என உத்தர விட்டது. குறிப்பாக அம்மாநிலங்களில், அனைத்து மதரஸாக்களும் இந்தப் பாடலைத் தங்களது மாணவர்களைக் கட்டாயமாகப் பாடச் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இந்த நாட்டை விட்டு வெளியேறி அந்நிய நாட்டில் அடிமை வேலை செய்யும் ''அம்பி''கள் அனுப்பும் அமெரிக்க டாலரை நன்கொடையாக வாங்கிக் குவிக்கும் விஸ்வ ஹிந்து பரிஷத்தின் பன்னாட்டுத் தலைவரான அசோக் சிங்கால், ''வந்தே மாதரத்தைப் பாட மறுப்பவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும்'' என்று பேட்டி கொடுத்துள்ளார். மறுபுறம், ''சுதந்திரப் போராட்டக் காலத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களைப் போராட்டத்தை நோக்கி ஈர்த்த இந்தப் பாடலைப் பாட மறுப்பது தேசத்துரோகச் செயல்'' என ஆட்சியாளர்களால் விரிவாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

'திராவிட நாடு' கேட்டுக் கொண்டிருந்தபோது, இதே பாடலை 'வந்தே ஏமாத்துறோம்' என நக்கலடித்த கருணாநிதியோ, இன்று பெருமுதலாளியாகி, தேசிய நீரோட்டத்தில் கலந்து விட்டதால், 'பாட வேண்டியது கட்டாயமில்லை' என்று இந்தப் பஜனைக்குச் சுருதி தப்பாமல் பின்பாட்டுப் பாடுகிறார். சென்னை மேயராக இருந்த மு.க.ஸ்டாலின் தலைமையில், சுதந்திரப் பொன்விழாவை ஒட்டி ஒரு மைல் நீளத்துக்கு தேசியக் கொடியைத் தெரு வெங்கும் பரத்திப் பரவசப்பட்டவர்கள் தானே இவர்கள்! சமயம் கிட்டும் போதெல்லாம் ''கழக அரசுதான் கார்கில் நிதியை அதிகமாகக் கொடுத்தது'' என்று தம்பட்டம் அடித்து இந்திய தேசிய சாக்கடையில் மூழ்கவும் தயங்காத இவர்கள், இம்முறை பா.ஜ.க.வின் பஜனையில் கரைந்து போனது ஆச்சரியமில்லைதான்.

இவர்கள்தான் இப்படி என்றால், மே.வங்கத்தை ஆளும் போலி கம்யூனிஸ்டும், தரகு முதலாளிகளின் கையாளுமான புத்ததேவ் பட்டாச்சார்யாவும், ''அனைவரும் பாடலாம்; ஆனால் பாட வேண்டியது கட்டாயம் இல்லை'' என்று கூறி ஒதுங்கிவிட்டார். மதச்சார்பின்மைக்காக காங்கிரசுடன் கூட்டணி அமைத்துள்ளதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள், பா.ஜ.வின் இந்து தேசிய வெறியை எதிர்க்கத் துப்பில்லாமல், காங்கிரசும் பா.ஜ.க.வோடு ஓரணியில் நிற்பதைப் பார்த்து அடங்கிப் போய் மவுனம் காக்கின்றனர்.

பங்கிம் சந்திர சாட்டர்ஜி



முதலில் இந்த ஆண்டு, வந்தே மாதரம் பாடலின் நூற்றாண்டே அல்ல. 1870-களில் எழுதப்பட்டு 1882-இல் ஒரு நாவலில் சேர்க்கப்பட்ட ஒரு பாட்டுக்கு இந்த ஆண்டுதான் நூற்றாண்டு எனத் திடீரென விழா எடுப்பதற்கு அவசியமென்ன வந்தது? அமெரிக்காவின் அடியாளாக மாறிக் கொண்டிருக்கும் இந்த அரசு சமீபத்தில் அமெரிக்காவுடன் கையெழுத்திட்ட அணுசக்தி ஒப்பந்தத்திற்கு, அணுசக்தி விஞ்ஞானிகளிடம் இருந்து கடும் எதிர்ப்பு வந்து சேர்ந்து, தனது முகமூடி கிழிந்து தொங்கியதாலும், மறுகாலனியத் தாக்குதலால் உழைக்கும் மக்களிடம் வெறுப்பும் ஆட்சியாளர்களுக்கு எதிரான ஆத்திரமும் பெருகி வருவதாலும், பிரச்சினையைத் திசைதிருப்பி தேசபக்தித் தீயை மூட்டிக் குளிர்காய அரசு நினைத்தது. ஆளும் கட்சியினருக்கு இது ஒன்றும் புதியதல்ல; முந்தைய பா.ஜ.க. ஆட்சியின்போது தேசிய வெறியைக் கிளப்ப போக்ரானில் அணுகுண்டு வெடித்தும், பிரச்சினைகள் முற்றியபோது எல்லைப் புறத்தில் சிப்பாய்களைக் கொண்டு போய் நிறுத்தி தோட்டா ஒன்றைக் கூடச் சுடாமல் 'போர் பீதி'யை கிளப்பியதும் யாவரும் அறிந்ததுதான்.

கட்சிக்குள் நிலவும் கோஷ்டி தகராறால் உமாபாரதி வெளியேற்றம், போதைப் பொருள் உபயோகித்துக் கையும் களவுமாய் மாட்டிய ராகுல் மகாஜன் விவகாரம், ஜார்கண்ட் மாநிலத்தில் பறிபோன ஆட்சி, முக்கிய தலைவர்களின் ஒழுக்கக்கேடுகள் ''வீடியோ சிடி''களாக வெளிவந்த விவகாரம் என அழுகி நாறிக் கொண்டிருக்கும் பா.ஜ.க.விற்கு, அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் வரப்போகும் உ.பி., போன்ற மாநிலங்களின் தேர்தலுக்கு உதவிட அருமருந்தாய் இந்த வந்தே மாதரம் விவகாரம் கிடைத்தவுடன் துள்ளிக் குதிக்க ஆரம்பித்தது. 'முஸ்லீம்கள் பாட மறுக்கிறார்கள், அதனால் அவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள்' என மக்களிடையே இந்து-முஸ்லீம் பிளவைக் கூர்மைப்படுத்தி, தனது இந்துவெறி ஓட்டு வங்கியைத் தூசு தட்ட ஆரம்பித்தது. ஏற்கெனவே 'கிரிக்கெட்



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

டில் பாகிஸ்தான் ஜெயித்தால் வெடி போடுகிறார்கள்' என்று முஸ்லீம், களுக்கு எதிராகச் சொல்லி வந்த அவதூறின் தொடர்ச்சியாக 'வந்தே மாதர' விவகாரத்தை அக்கட்சி கையில் எடுத்துக் கொண்டது. செப்டம்பர் 7-ஆம் தேதியன்று காங்கிரசு. தலைவி சோனியா 'வந்தே மாதம்' பஜனையில் கலந்து கொள்ளாததை ஊதிப் பெருக்கி ''சிறுபான்மையினரை தாஜா செய்கிறார்'' என்று தனது மதவெறிப் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டது.

வந்தே மாதம் பாடலுக்கும் நாட்டுப்பற்றுக்கும் அப்படியென்ன தான் சம்பந்தம் இருக்கிறது?

1882-ஆம் ஆண்டு வெளிவந்த ''ஆனந்த மடம்'' எனும் வங்க நாவலில் இடம் பெற்ற பாடல்தான் 'வந்தே மாதரம்'. இந்த நாவலை எழுதியவர் பங்கிம் சந்திர சாட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனர். அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கத்தில் டெபுடி மாஜிஸ்ரேட்டாக விசுவாசமான காலனிய சேவை செய்த சாட்டர்ஜி, 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வங்காளத்தில் நவாபுக்கு எதிராக நடந்த வைணவ சந்நியாசிகளின் கலகத்தைப் பின்னணியாகக் கொண்டு இந்நாவலை எழுதினார்.

1773-ஆம் ஆண்டில் வங்காளத்தில் வந்த பஞ்ச காலத்திலிருந்து நாவல் தொடங்குகிறது. அன்றைய வங்காள நவாபான மீர் ஜாபரின் கஜானாவை சந்நியாசிகள் கொள்ளையடிக்கின்றனர். இந்த நாவலில் வரும் பவானந்தன் எனும் கதாபாத்திரம், நவாபுக்கு எதிராக வைணவத் துறவிக் கூட்டத்துடன் அரசாங்கக் கஜானாவைக் கொள்ளையிடவும், முஸ்லீம் வழிபாட்டுத் தலங்களை இடிக்கவும் செல்லும் போது 'வந்தே மாதரம்' பாடலினைப் பாடியபடியே மக்களைத் திரட்டுவதாய் நாவல் செல்கிறது.

''இந்தப் பாதகர்கள் நிரம்பிய யவன புரியைத் தகர்த்து ஆற்றில் வீழ்த்தவிட வேண்டும்'' என்றும், ''இந்தத் துன்மார்க்கர்கள் கூட்டத்தை தீ வைத்து எரித்து அன்னையாகிய நமது தாய்நாட்டை மீண்டும் பரிசுத்தமாக்க வேண்டும்'' என்றும் ''நமது தேவாலயங்களை இடித்து அவற்றின் மீது அவர்கள் எழுப்பிய கட்டிடங்களைத் தகர்த்தெறிந்து மறுபடியும் ராதா மாதவர்களுக்கு (கிருஷ்ணனுக்கு) கோயில் கட்டுவோமாக!'' என்றும் முஸ்லீம்களுக்கு எதிராக இந்நாவல் நெருப்பைக் கக்குகிறது.

''இத்தாடிப் பயல்களைத் தேசத்தை விட்டுத் துரத்தினாலன்றி இந்து மார்க்கத்திற்குச் சேமமில்லை'' என்றும் ''இம் மகம்மதியர் ஜாதி எனும் குருவிக் கூட்டைப் பிரித்தெறிய வேண்டுமென்று' அடிக்கடி நினைத்தோம். நம் மத எதிரிகள் நகரை அழித்து ஆற்றில் விடக் கருதினோம். இப்பன்றிகளின் கிடையைச் சாம்பலாக்கிப் பூமாதேவியின் துன்பத்தைத் துடைத்தெறிய எண்ணினோம்! நண்பர்களே! அதற்கான காலம் வந்து விட்டது. வாருங்கள்! நாம் சென்று அந்த இஸ்லாமியப் பாவிகளின் இருப்பிடத்தை அழிப்போம். அப்பன்றிகளை அடைக்கும் பட்டியை எரிப்போம். அக்குருவிக் கூட்டைக் கலைத்துக் குச்சிகளை எல்லாம் காற்றில் பறக்க விடுவோம்'' என்றெல்லாம் நஞ்சைக் கக்கி விட்டு, கூடவே, ''பகவான் நாமம் ஸ்தோத்திரம் செய்வோமாக!'' என்கிறார் பங்கிம் சந்திர சாட்டர்ஜி.

முஸ்லீம்களை தீ வைத்துப் பொசுக்குவதுதான் தேசத்தைப் பரிசுத்தமாக்குவதாம்! இதைத்தானே சங்கப் பரிவார பாசிஸ்டுகள் குஜராத்தில் செய்து முடித்தார்கள்! முஸ்லீம்கள் எழுப்பிய கட்டிடங்களைத் தகர்த்தெறியும் திட்டத்தின் மூல விதையை பார்ப்பன-பாசிச கும்பலுக்கு இந்த நாவல்தான் விதைக்கிறது எனும்போது, இந்நாவலில் இடம் பெறும் பாடலும் இந்து பயங்கரவாதிகளுக்கு உவந்து போனதில் வியப்பென்ன?

வந்தே மாதரம் என்றால் 'தாய்க்கு வணக்கம்' என்று பொருள். எந்தத் தாய்க்கு வணக்கமாம் அது? பாட்டின் இரண்டாம் பகுதியில் இதற்கு பதில் இருக்கின்றது. பார்வதி, காளி, துர்க்கை, சரஸ்வதி, லட்சுமி என்றெல்லாம் சுட்டப்படுபவள்தான் இந்தத் தாய். பாரதியார் மொழிபெயர்த்துள்ள வந்தேமாதம் பாடலில் இது தெளிவாகவே உள்ளது.

இந்தத் தாயைப் ''அகண்ட பாரத மாதா''வாக புரமோஷன் கொடுத்த கைங்கர்யத்தைக் காங்கிரசுக் கட்சி 1906-இல் செய்தது. 1930-களின் இறுதியில் இப்



இந்து மதப் பெண் தெய்வமாக உருவகப்படுத்தப் படும் பாரத மாதாவை வணங்குவதுதான் ''அக்மார்க்'' தேச பக்தியாம்!



இந்து மத பயங்கரவாதிகள் ஆளும் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள முசுலீம் உயர்நிலைப் பள்ளியில் ''வந்தே மாதரம்'' பாடலைப் பாடும் முசுலீம் மாணவிகள்: அச்சுறுத்தலின் மூலம் வளர்க்கப்படும் தேசபக்தி.



படிப்பகம்

www.padippakam.com

பாடலை 'தேசிய கீதமாக்க' காங்கிரசுக் கட்சி முயன்றது.

இப்பாடலுக்கு இசையமைத்த கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் ''வந்தே மாதரம் பாடல் துர்க்கை அன்னையை வணங்குவது போலப் பாடப்பட்டுள்ளது. இந்தியாவில் இந்துக்கள் தவிர முஸ்லீம்கள் மற்றும் பல மதத்தினர் இருக்கின்றனர். எனவே இந்தப் பாடலைத் தேசிய கீதமாக அறிவிக்கக் கூடாது'' என்று 1937-இல் எதிர்த்துள்ளார். எம்.என்.ராயும், சுபாஷ் சந்திர போசும் இப்பாடலுக்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

1937-இல் சென்னை மாகாண பிரீமியராக ராஜாஜி இருந்தபோது, சென்னை சட்டசபையில் இப்பாடலைப் பாடச் சொல்லி கட்டாயப்படுத்தினர். பாடல் பாடுகையில் எழுந்திருக்க மறுத்து 2 இஸ்லாமிய உத்யோகஸ்தர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஒரிஸ்ஸா சட்டசபையிலும் இது எதிர்ப்பை சம்பாதித்தது. பெரியாரின் ''குடியரசு'' பத்திரிகை அப்போதே இப்பாடலின் முஸ்லிம் விரோதப் போக்கை அம்பலப்படுத்தியிருக்கின்றது.

நான்கு கைகள் முளைத்த லட்சுமியைக் காட்டி அவள்தான் 'பாரதமாதா' என்றும், அவளை அனைவரும் வழிபட வேண்டும் என்று மற்ற மதத்தினரைக் கட்டாயப்படுத்துவதும் பார்ப்பன (இந்து) வெறியன்றி வேறென்ன?

முஸ்லீம்களை வெறுக்கக் கற்றுத்தரும் இதே நாவல், ஆங்கிலேயர்களுக்கு அதிக விசுவாசமாக ''ஆங்கிலேயர்கள் நமக்குப் பகைவர்கள் அல்லர்'' என்றும் ''இந்த சந்தான சந்நியாசிகள் செய்த புரட்சியின் காரணமாகவே அரசுப் பொறுப்பை ஆங்கிலேயர்கள் ஏற்க வேண்டி வரும்'' என்றும் கூறுகிறது. பல இடங்களில் பிரிட்டிஷாரை வெகுவாகப் புகழ்கிறது. இந்து தர்மம் தழைக்கக் கூட ஆங்கிலேயனின் ஆதிக்கம் வேண்டுமென ஆன்மீகக் கயமைத்தனத்தைக் காட்டுகிறது இந்நாவல்.

நமது நாட்டின் சக குடிகளான இசுலாமியர்களை அழிக்கவும் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு அடிவருடிகளை உருவாக்கவும் முனையும் இந்த நாவலில்தான் இன்றைக்கு தேசபக்தியின் அடையாளமாகக் காட்டப்படும் 'வந்தே மாதரம்' பிறந்துள்ளது. இப்பாடலை வைத்து தேசபக்தி பஜனை பாடும் பா.ஜ.க., காங்கிரசு இரண்டுமே நாவல் குறிப்பிடுவது போலவே நாட்டின் சிறுபான்மை மக்களை அழிப்பதிலும், நாட்டை அன்னியனுக்குக் காட்டிக் கொடுப்பதிலும் ஓரணியில் நிற்கின்றன.



**''புரட்சி ஓங்குக!'' (இன்குலாப் ஜிந்தாபாத்) என பகத்சிங் முழங்கிய, ஏகாதிபத்திய எதிர்ப்பும், நிலப்பிரபுத்துவ எதிர்ப்பும், மதச்சார்பின்மையும் கொண்ட புரட்சியின் முழக்கம் தான் இனி நாடெங்கும் ஒலிக்கப் போகிறதே தவிர, ஏகாதிபத்திய கைக்கூலிகளின் வந்தே மாதரம் பஜனை அல்ல!**

வந்தே மாதரத்தைப் பாடுவதன் மூலம் ஒருவன் தேசப் பற்றாளன் என்றோ, அதைப் பாட மறுப்பவன் தேசத்துரோகி என்றோ கருதி விட முடியுமா? அப்படியானால் ''வண்டே... மாட்றம்'' என்று நவீன மெட்டுக்கள் மூலம் ஏ.ஆர்.ரகுமான் போன்ற பிரபலங்களை வைத்து இந்தியா முழுவதும் இப்பாடலை ஒலிக்கச் செய்து, கல்லாவை நிரப்பிக் கொண்ட அந்நிய நிறுவனமான ''சோனி''தான் 'இந்திய நாட்டின் சிறந்த தேசபக்தனாக' இருக்க முடியும்.

போலியான தேசபக்தி அரட்டைக் கச்சேரி செய்யும் காங்கிரசு கும்பலோ தாம் ஆண்ட ஐம்பது ஆண்டுகளில் அடுத்தடுத்து நாட்டை அந்நியனுக்குக் காட்டிக் கொடுத்து, இந்திய ராணுவத்திற்கு போர் விமானம், போபர்சு பீரங்கி, நீர் மூழ்கிக் கப்பல் வாங்குவதிலும் ஊழல் செய்து திளைத்தது. அதீத கூச்சல் போடும் பா.ஜ.க.வோ, சீமைச் சாராயம், விபச்சார அழகிகளுக்காக ராணுவ ரகசியங்களை விற்க முன்வந்ததையும், கார்கில் போரில் மாண்ட வீரர்களின் உடலை எடுத்துச் செல்லும் சவப் பெட்டிகளில்கூட கமிஷன் அடித்ததையும் மறைத்துவிட்டு, 'வந்தே மாதரம் பாடுவதுதான் தேச பக்தி' எனக் கூச்சல் போடுகிறது. காசுக்காகவும், சாராயத்துக்காகவும், விபச்சாரிகளுக்காகவும் நாட்டின் பாதுகாப்பையே விற்ற இவர்களுக்குத் தேச பக்தி பற்றிப் பேசிட அருகதை உண்டா?

ஒரு நாடு என்பது நாட்டு மக்களையும், அவர்கள் சார்ந்திருக்கும் இயற்கை வளங்களையும் பண்பாட்டையும் குறிப்பதாகும். நாட்டு மக்களின் மீதும், நாட்டின் மீதும் உண்மையான அக்கறையுடன், அந்நிய ஆக்கிரமிப்புக்கும், ஆதிக்கத்துக்கும் எதிராகவும், நாட்டு மக்கள் நலன் மீது மாளாக் காதலுடனும் போராடுவதே உண்மையான நாட்டுப் பற்றாகும். இதைச் செய்யாமல் தேசத்துரோக ஒப்பந்தங்கள் மூலம் நாட்டின் இறையாண்மையை ஏகாதிபத்தியங்களிடம் அடகு வைத்து விட்டு, 'வந்தே மாதரம்' பஜனை பாடுவது நாட்டுப் பற்றாகாது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது வந்தே மாதரத்தைவிட வேறு இரண்டு முழக்கங்கள் ஓங்கி ஒலித்தன. அவை: சுபாஷ் சந்திரபோஸின் ''ஜெய் ஹிந்த்'' மற்றும் பகத்சிங்கின் ''இன்குலாப் ஜிந்தாபாத்'' 1929-இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவிருந்த தொழிலாளர் நலனுக்கு எதிரான சட்டத்தைக் கண்டித்துப் போராடும் விதமாக வெடிகுண்டு வீசியபோதும், பின்பு ராஜகுரு, சுகதேவுடன் தூக்கிலிடப்பட்ட போதும் பகத்சிங் முழங்கியது இதே 'இன்குலாப் ஜிந்தாபாத்'தான். அத்தகைய தேசப்பற்றாளனின், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியின் பிறந்தநாள் நூற்றாண்டும் இந்த ஆண்டுதான்.

''புரட்சி ஓங்குக!'' (இன்குலாப் ஜிந்தாபாத்!) என பகத்சிங் முழங்கிய முழக்கம்தான் நூற்றாண்டுகளைக் கடந்து இன்னமும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. இனிவரும் நூற்றாண்டும் புரட்சியின் நூற்றாண்டாக இருக்கப் போகிறதே அன்றி, இந்துவெறி - தேசிய வெறிக்கானதாக இருக்கப் போவதில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பும் நாட்டுப்பற்றும் மதச்சார்பின்மையும் கொண்ட புரட்சியின் முழக்கம்தான் இனி நாடெங்கும் எதிரொலிக்கப் போகிறதே தவிர, ஏகாதிபத்திய கைக்கூலிகளின் வந்தேமாதரம் பஜனை அல்ல.

• அன்பு



படிப்பகம்

www.padippakam.com

செப்.28 2006

# ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளி தியாகத் தோழர் பகத்சிங்-கின் நூற்றாண்டு பிறந்த தினம்

தோழர் பகத்சிங்கின் நூறாம் ஆண்டு பிறந்த தினம் செப்.28, 2006 அன்று தொடங்குகிறது. அவரது நூற்றாண்டு பிறந்ததினத்தை, காங்கிரசு, பா.ஜ.க. முதல் போலி கம்யூனிஸ்டுகள் வரையிலான அனைத்து வண்ண ஓட்டுக் கட்சிகளும், 'கோலாகலமாக'க் கொண்டாடுவார்கள். வீரபாண்டிய கட்டபொம்மனை நினைவுகூர்ந்து எட்டப்பன் அஞ்சலி செலுத்தினால் எத்துணை அருவெறுக்கத்தக்கதாக இருக்குமோ, அத்துணை நயவஞ்சகமானது ஓட்டுக் கட்சிகள் பகத்சிங்கிற்கு அஞ்சலி செலுத்துவது.

ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதி, சாதி-மத அடையாளங்களை முற்றாக விலக்கிய மதச்சார்பின்மை, விஞ்ஞான சோசலிசத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை - பகத்சிங்கின் அடையாளம் என்பது இவைதான். ஆனால், ஓட்டுக் கட்சிகளோ இப்புரட்சிகரமான அரசியல் உள்ளடக்கத்தை பகத்சிங்கிடமிருந்து நீக்கிவிட்டு, அவரை பூசையறைப் படமாக மாற்றிவிட முயலுகின்றன. பகத்சிங்கின் அரசியல் பேராளுமை, இப்படி துரோகிகளால் சிறுமைப்படுத்தப்படுவதை நாம் ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது.



காலனியாதிக்கத்தைவிடக் கொடிய மறுகாலனியாதிக்கம் நம்மை அடிமைப்படுத்திவரும் இன்றைய சூழலில், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைப் போர்க்குணத்தோடு முன்னெடுத்துச் செல்வதுதான், நாட்டு விடுதலைக்காக தூக்குக் கயிறை முத்தமிட்ட போராளி பகத்சிங்கிற்கு நாம் செலுத்தும் உண்மையான வீரவணக்கமாக இருக்க முடியும்.

நூற்றாண்டு கடந்த பின்னரும் இந்திய விடுதலையின் கலங்கரை விளக்கமாய் ஒளிவீசிக் கொண்டிருக்கும் பகத்சிங்கின் தியாகம்; காலனியாதிக்கவாதிகளைக் கதிகலங்க வைத்த அவரது மாவீரம்; போராட்டத்தில் உறுதி ஆகிய அவரது உயரிய கம்யூனிசப் பண்புகளை வழுவாமல் பின்பற்றுவோம்! ஏகாதிபத்தியத்தையும், மறுகாலனியாதிக்கத்தையும் வீழ்த்தி நாட்டை விடுதலை செய்யும் மகத்தான பணியில் நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம் என்று இந்நாளில் உறுதியேற்போம்!

ஓங்கட்டும் பகத்சிங்கின் புகழ்!
ஒழியட்டும் மறுகாலனியாதிக்கம்!
மலரட்டும் புதிய ஜனநாயக இந்தியா!

*- ஆசிரியர் குழு, புதிய ஜனநாயகம்.*

## வாசகர் கடிதம்

• விஜயகாந்தின் அரசியல் பிரவேசத்தை திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக, சில அறிவாளிகள் கருதிவரும் வேளையில், இந்த மூன்றாவது அரசியல் கழிசடையை அம்பலப்படுத்திக் காட்டியது சிறப்பு. 'கோக்' ஆக்கிரமிப்பாளருக்கு விசுவாச சேவை செய்யும் நவீன எட்டப்பர்களான அன்புமணி - புத்ததேவ் - கருணாநிதி ஆகியோரை உரிய தருணத்தில் பு.ஜ. எடுப்பாக அம்பலப்படுத்தியுள்ளது. கிரிமினல் குற்றக் கும்பல்களின் கூட்டாளிகள்தான் போலீசும் அதிகாரவர்க்கமும் என்பதை கேரள அய்யப்பன் கோயில் தந்திரி விவகாரத்தின் மூலம் நிரூபித்துக் காட்டி, வர்க்கக் கோபத்துடன் எழுதப்பட்டுள்ள கட்டுரை பிரச்சாரத்துக்குப் பெரிதும் உதவியது.

– வாசகர் வட்டம், ஒசூர்.

• 'கோக்' என்பது அமெரிக்கா மேலாதிக்கத்தின் சின்னம் என்பதைப் புரிந்து கொண்டு, கோக்கிற்கு எதிராக நாடெங்கும் மக்கள் போராடிய சூழலில், போலி கம்யூனிச முதல்வர் புத்ததேவும் சமூக நீதிபேசும் அன்புமணி, கருணாநிதி ஆகியோரும் கோக்கிற்கு முட்டுக் கொடுத்து ஆதரிப்பது அடிமைத்தனத்தின் புதிய பரிமாணம். ஜெனிவா பேச்சு வார்த்தை குறித்த கட்டுரையின் விவரங்கள், இந்தியா இனி ஒரு விவசாய நாடு அல்ல; விற்பனைக்காடு என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

- இரா. மணிகண்டன், குசுவாடி.

• விஜயகாந்தை புதியதொரு அரசியல் மாற்றாகக் கருதுவோருக்கு பு.ஜ.வில் வந்த கட்டுரை சரியான சவுக்கடியாக அமைந்துள்ளது. திராவிட கேப்டனின் கழிசடை அரசியலை இளைஞர்களிடம் அம்பலப்படுத்தி முறியடிக்க நாம் இன்னும் கடுமையாக வேலை செய்ய வேண்டும்.

- யாழினி, சென்னை.

• மக்களிடையே நிலவும் கோக்-பெப்சி எதிர்ப்புணர்வைப் பூசி மெழுகி 2003-இல் துரோகமிழைத்த பா.ஜ.க. கும்பலையே விஞ்சும் வண்ணம் இப்போது 2006-இல் பா.ம.க.வின் அன்புமணி துரோகமிழைத்து வருகிறார். அவரோடு சேர்ந்து பின்பாட்டு பாடுகிறார்கள் கருணாநிதியும் புத்ததேவும். இந்தப் போலி முற்போக்குகளும் ஏகாதிபத்திய அடிமைகள்தான் என்பதை பு.ஜ.இதழின் அட்டைப் படக் கட்டுரை எடுப்பாக உணர்த்தியது.

- இராணி, மத்தூர்.

• தில்லையில் திருச்சிற்றம்பலத்தில் தேவாரம் - திருவாசகம் பாடத் தடைவிதிக்கும் மனுநீதி தீர்ப்பானது, தீண்டாமை எந்த அளவுக்கு வீரியமாக உள்ளது என்பதையும், பார்ப்பனக் கும்பலின் ஆதிக்கத்தையும் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது. களத்தில் நின்று தமிழுக்காகவும் பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகவும் தொடர்ந்து போராடிவரும் புரட்சிகர அமைப்புகளுக்கு என் நன்றியும் வாழ்த்துக்களும்.

- இராமலிங்கம், காட்டுமன்னார் கோவில்.

• கிரிமினல் குற்றக் கும்பல்கள் அம்பலமான பின்னரும் அய்யப்பன் கோவிலின் 'புனிதத்தை'க் காக்க போலி கம்யூனிச ஆட்சியாளர்கள் புறப்பட்டிருப்பது வெட்கக்கேடானது. கோக்-பெப்சியின் புதிய அடியாட்களை அம்பலப்படுத்திய அட்டைப்படக் கட்டுரை பிரச்சாரத்துக்குப் பெரிதும் உதவியது.

வாசகர் வட்டத்தின் இறுதியில், ''பிணங்களை அறுவடை செய்யும் இந்திய அரசு'' என்ற தலைப்பில் விதர்பா விவசாயிகளின் அவலத்தை வி.வி.மு. தோழர் ரவி விளக்கிப் பேசி, தாராளமயத்துக்கு எதிராகப் போராட அறைகூவினார்.

- வாசகர் வட்டம், திருச்சி.



படிப்பகம்

## மாலேகான் குண்டு வெடிப்பு:

# நிவாரணம் கிடைக்கலாம்; நீதி கிடைக்குமா?

மகாராஷ்ரா மாநிலத்திலுள்ள மாலேகான் நகரில், செப்டம்பர் 8 அன்று அடுத்தடுத்து நடந்த நான்கு குண்டு வெடிப்புகளில் 31 பேர் கொல்லப்பட்டனர்; 200-க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வெள்ளிக் கிழமை தொழுகை முடியும் நேரத்தில், குறிப்பாக, முசுலீம்கள் இறந்து போன தங்களின் உறவினர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் நாளில், ஹமீதியா மசூதி, படா காபரிஸ்தான் (முசுலீம்களின் மயானம்) ஆகிய இடங்களில் இந்தக் குண்டு வெடிப்புகள் நடந்துள்ளதால், இதனை நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட பயங்கரவாத நடவடிக்கையாகவே கருத முடியும்.

ஏற்கெனவே, முசுலீம் பகுதி, இந்து பகுதி என மதரீதியாகப் பிளவுண்டு கிடக்கும் மாலேகான் நகரில் நடந்துள்ள இந்தக் குண்டு வெடிப்புகள், மீண்டுமொரு மதக் கலவரத்தைத் தூண்டிவிடுமோ என்ற பீதி மகாராஷ்டிரா மாநிலத்தையே ஆட்டிப் படைத்தது. அந்நகரைச் சேர்ந்த முசுலீம் மதப் பெரியோர்களின் முன்முயற்சியால் கலவரம் முளுவது தடுக்கப்பட்டுவிட்ட போதிலும், அந்தப் பீதி மட்டும் இன்றும் அந்த நகரைவிட்டு விலகி விடவில்லை.

குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு உடன்டியாக சிகிச்சை அளிக்க முடியாத அவல நிலையில் அரசு மருத்துவமனை இருந்ததால், படுகாயமடைந்த பலரை மாலேகானில் இருந்து 55 கி.மீ. தொலைவில் உள்ள துலியா நகருக்குத் தூக்கிக் கொண்டு ஓட நேர்ந்தது. குண்டு வெடிப்பை விட, அதிகார வர்க்கத்தின் இந்த அலட்சியம் தான் மாலேகான் முசுலீம்களை ஆத்திரம் கொள்ள வைத்தது. சோனியா தலைமையில் மாலேகானுக்கு வந்த காங். கும்பல் நட்டாட்டை வீசியெறிந்து, அவர்களின் கோபத்தைத் தணித்துவிட முயன்றது. ஆனால், பாதிக்கப்பட்ட பலரும் நட்டஈட்டை வாங்க மறுத்து, ஆட்சியாளர்களின் முகத்தில் கரியைப் பூசிவிட்டனர்.

இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பாக இதுவரை யாரையும் போலீசார் கைது செய்யவில்லை என்றும்; இந்தக் குண்டு வெடிப்பை யார் / எந்த அமைப்பு செய்தது என்பது பற்றி சிறிய தடயம் கூட போலீசாருக்கு கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

அதேசமயம் முசுலீம்களைக் குறிவைத்து இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் நடைபெற்றிருப்பதால், இதற்குப் பின்னணியில் இந்து தீவிரவாத அமைப்புகள் இருக்கலாம் என்ற ஊகம் பொதுமக்களிடையே இருந்து வருகிறது. ஆனால், மகாராஷ்டிரா போலீசோ, ஆர்.டி.எக்ஸ். வெடிகுண்டுகளை இயக்கும் அளவிற்கு இந்துமத தீவிரவாத அமைப்புகள் திறன் பெற்றவை அல்ல என நற்சான்றிதழ் வழங்கி, அந்தத் திசையில் விசாரணை நடத்தக் கூட மறுத்து வருகிறது. ஆனால், இந்த ஊகத்தை முன்வைக்கும் பத்திரிகையாளர்கள் கூட, (தி ஹிந்து, 9.9.06, பக். 13) நந்தேடில் நடந்த குண்டு வெடிப்பையும்; ஜல்னா, பர்பானி ஆகிய சிறு நகரங்களில் மசூதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகளையும் ஆதாரமாகக் காட்டுகிறார்கள்.

மகாராஷ்டிராவில் நந்தேட் மாவட்டத்திலுள்ள தரோடா கிராம பஞ்சாயத்தைச் சேர்ந்த ராஜ்கோண்ட்வார் என்பவரது வீட்டில் கடந்த ஏப்ரல் 6 அன்று நடந்த குண்டு வெடிப்பில் ஹிமான்ஷு பான்ஸே, நரேஷ் ராஜ்கோண்ட்வர் என்ற இரு இளைஞர்கள் குண்டு வெடித்த இடத்திலேயே உடல் சிதறி இறந்து போனார்கள். யோகேஷ் தேஷ் பாண்டே, மாருதி வாக், குருராஜ் துப்தேவர் என்ற இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர். குண்டு வெடித்த சத்தம் இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவிற்குக் கேட்டது.

ஆனால், நந்தேட் மாவட்ட போலீசு கண்காணிப்பாளரோ, நடந்தது குண்டு வெடிப்பு அல்ல என்றும்; அந்த வீட்டில் இருந்த பட்டாசுகள் எதிர்பாரதவிதமாக வெடித்துச்சிதறியதால் ஏற்பட்ட விபத்து என்றும் பூசி மெழுகினார். குண்டு வெடித்த மறுநாள் போலீசாரோடு பொதுமக்களும், பத்திரிகையாளர்களும், சில அரசியல் கட்சித் தலைவர்களும் ஒன்றாகச் சென்று, குண்டு வெடிப்பு நடந்த வீட்டைச் சோதனையிட்டபொழுது, ஒரு வெடிக்காத குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பிறகுதான், மகாராஷ்டிரா மாநில அரசின் சிறப்பு ஐ.ஜி. அந்த வீட்டில் இருந்த இளைஞர்கள் சக்தி வாய்ந்த வெடிகுண்டு தயாரிக்க முயன்றதை ஒப்புக் கொண்டார்.

காயம் அடைந்தவர்களிடம் நடத்திய முதல்கட்ட விசாரணையில், அந்த வீட்டில் வெடிகுண்டுகள் தயாரிப்பது

மாலேகானில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் படுகாயமடைந்த சிறுவன் மஜீத் சஜித்



www.padippakam.com

நீண்ட நாட்களாக நடந்து வருவதும்; பர்பானி, பூர்னா, ஜல்னா ஆகிய ஊர்களில் மசூதிகளின் மீது நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலுக்குத் தொடர்பிருப்பதும் தெரிய வந்தது. மேலும், இறந்து போன இளைஞர்களும்; காயம் அடைந்தவர்களும் ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள், விசுவ இந்து பரிசத்தின் அமைப்புகளின் தீவிர உறுப்பினர்கள் என்பதை ஆர்.எஸ்.எஸ். தலைமையே ஒப்புக் கொண்டது.



மாலேகான் குண்டு வெடிப்பைக் கண்டித்து மகாராஷ்டிரா- அகோலா நகரில் கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட முசுலீம்களைத் தாக்கித் துரத்தும் போலீசு.

ஆனால், மகாராஷ்டிரா போலீசோ இக்குண்டு வெடிப்பின் பின்னணியில் உள்ள இந்து பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தாமல், அக்குண்டு வெடிப்பை, உள்ளூர் கிரிமினல் சம்பவமாகச் சித்தரித்து மூடிவிட்டது. குறிப்பாக, இக்குண்டு வெடிப்பிற்கும், சங்கப் பரிவார் அமைப்புகளுக்கும் இடையே உள்ள தொடர்பை மகாராஷ்டிரா போலீசார் விசாரணைக்கே எடுத்துக் கொள்ளவில்லை.

முசுலீம் தீவிரவாதிகள் மீது பொடாபோன்ற பாசிசச் சட்டங்களை ஏவிவிடும் ஆளுங்கும்பல், இக்குண்டு வெடிப்பில் கைது செய்யப்பட்டவர்கள் மீது சாதாரண கிரிமினல் சட்டங்களின் கீழ் தான் வழக்குத் தொடர்ந்தது. குறிப்பாக, கைது செய்யப்பட்ட இந்து பயங்கரவாதிகள் மீது, மகாராஷ்டிரா மாஃபியா நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை மகாராஷ்டிரத்தை ஆளும் காங்கிரசு கூட்டணி கண்டு கொள்ளவேயில்லை. தனது ''இந்து'' ஓட்டு வங்கியை, பா.ஜ.க. - சிவசேனா கும்பல் கைப்பற்றி விடக் கூடாது என்பதற்காகவே, காங்கிரசு கூட்டணி அரசு இந்து பயங்கரவாதிகளிடம் மென்மையாக நடந்து கொண்டது.

முசுலீம் தீவிரவாதம் குறித்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதிவரும் பிரவீண் சுவாமி என்ற பத்திரிகையாளர், ''நந்தேட், பர்பானி, ஜல்னா ஆகிய இடங்களில் நடந்த குண்டு வெடிப்புகளைப் பார்க்கும்பொழுது, இந்துமதத் தீவிரவாத அமைப்புகளின் குண்டு தயாரிக்கும் திறன் அதிகரித்து வருவதாகக் குறிப்பிடுகிறார். ஆனால், மகாராஷ்டிர மாநில அரசின் தீவிரவாத எதிர்ப்பு போலீசு பிரிவோ, மாலேகானைச் சேர்ந்த 20 ''இந்து'' இளைஞர்களைப் பிடித்துப் போய், ஒப்புக்காக ஒரு விசாரணை நடத்தி விட்டு, விடுவித்து விட்டது.

மும்பய் ரயில் குண்டு வெடிப்புகளுக்குப் பின்னே, இந்திய முசுலீம் மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் ஊழியர்களைக் கூட விட்டு வைக்காமல், கைது செய்து விசாரணை நடத்திய மகாராஷ்டிரா போலீசார் மாலேகான் குண்டு வெடிப்பில், எந்தவொரு இந்துமத பயங்கரவாதியின் மீதும் கைகூட வைக்கவில்லை.

ம.பி. மாநிலம் இந்தூரில் குண்டுகள் நிறைந்த துப்பாக்கி - வெட்டரிவாளுடன், ஊர்வலம் நடத்தும் பஜ்ரங் தள்: இந்த இந்து பயங்கரவாதத்தின் மீது அரசு பயங்கரவாதம் பாய்வதில்லை.



இது ஒருபுறமிருக்க, மும்பய் ரயில்களில் வெடித்த குண்டுகளும் மாலேகானில் வெடித்த குண்டுகளும் ஒரே மாதிரியானவை; எனவே, முசுலீம் தீவிரவாத அமைப்புகள் கூட, மதக் கலவரத்தைத் தூண்டிவிடும் எண்ணத்தோடு, இந்தக் குண்டு வெடிப்பை நடத்தியிருக்கக் கூடும் என்ற ஆதாரமற்ற ஊகத்தை பத்திரிகைகள் மூலம் போலீசு பரப்பி வருகிறது.

இப்படி எதிரும், புதிருமான சந்தேகங்களை, ஊகங்களை முறையாக விசாரிக்காமல் இழுத்தடித்தால், மாலேகான் நகரைச் சேர்ந்த இந்துக்களுக்கும், முசுலீம்களுக்கும் இடையே நிலவி வரும் பகையும், வெறுப்பும் அதிகரிக்கத்தான். செய்யும்; அந்நகரைப் பிடித்தாட்டும் மதக்கலவர பீதி அணைந்துவிடாமல் ஊதிவிடப்படும். ஆர்.எஸ்.எஸ். - இந்து பயங்கரவாதிகள், முசுலீம் தீவிரவாதிகள் மட்டுமின்றி, 'மதச்சார்பற்ற' காங்கிரசும் இந்தப் பிளவைத்தான் விரும்புகிறது.

● தனபால்



படிப்பகம்

# இணையதள வர்த்தகம்:

# விலைவாசியை உயர்த்தும் ஊக வணிகச் சூதாட்டம்

அண்மைக் காலமாக உணவு தானியங்களின் விலை கிடுகிடுவென உயர்ந்து சாமானிய மக்களின் கழுத்தை நெறித்து வருகிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை கிலோவுக்கு ரூ. 1.50 முதல் ரூ. 2 வரை உயர்ந்துள்ளன. ரூ. 28-30 ஆக இருந்த உளுத்தம் பருப்பின் விலை இன்று ரூ. 50-55 ஆக உயர்ந்து விட்டது. இதர பருப்பு வகைகளின் விலையும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறது.

திடீரென ஏற்பட்ட இந்த விலையேற்றத்துக்குக் காரணம் என்ன? பெட்ரோல் - டீசல் விலையேற்றம் ஒரு முக்கிய காரணம் என்றாலும், ''இணையதள விற்பனை'' எனும் உலகளாவிய ஊக வணிகமே இந்த விலையேற்றத்துக்கு அடிப்படையாக உள்ளது.

ஆங்கிலத்தில் ''ஆன்லைன் டிரேடிங்'' (Online Commodity Trading; Futures Trading) என்றழைக்கப்படும் இணைய தள விற்பனை என்பது, இரு நபர்களுக்கிடையே அல்லது இரு நிறுவனங்களுக்கிடையே ஒரு பொருளை ஊக விலையின் அடிப்படையில் எதிர்காலத்தில் வாங்கவும் விற்கவும் இணையதளம் மூலம் செய்து கொள்ளப்படுகின்ற ஓர் ஒப்பந்தமாகும். அதாவது, ஒரு விற்பனையாளர் 3,4 மாதங்களுக்குப் பிறகு தோராயமான ஊக விலைக்கு உணவு தானியங்களை வாங்குவதாக, வாங்குபவரிடம் இணையதளம் மூலம் ஒப்புக் கொள்ளும் முறையாகும். அரிசி, பருப்பு, காய்கறிகள் முதல் தங்கம் வரை 150-க்கும் மேற்பட்ட பொருள்கள் தற்போது ''ஆன்லைன் வர்த்தகம்'' எனப்படும் இணையதள விற்பனைக்கு வந்துள்ளன. இத்தகைய இணையதள விற்பனையை எளிதாக்கும் பொருட்டு பல்வேறு தொடர்பக நிறுவனங்கள் (எக்ஸ்சேஞ்சுகள்) இயங்கி வருகின்றன. இந்நிறுவனங்கள் மூலம் ஒருநாளைக்கு ஏறத்தாழ ரூ. 5,000 கோடி அளவுக்கு விற்பனைப் பரிமாற்றங்கள் நடந்து வருகின்றன.

மேலோட்டமாகப் பார்க்கும்போது, இது ஒரு எளிய பரிமாற்றமுறை போலத் தோன்றினாலும், இது ஊக வணிகர்களின் கொள்ளைக்கும், பதுக்கலுக்கும், கள்ளச் சந்தைக்கும், விலையேற்றத்துக்குமான ஒரு ஏற்பாடேயாகும். உணவுப் பொருட்கள் தட்டுப்பாட்டுக்கும், உணவு தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சிறு தொழில்களின் அழிவுக்கும், ரூபாயின் மதிப்பு செல்லாக்காசாகிப் போவதற்குமான இன்னுமொரு ஏகாதிபத்திய சதியே ஆகும்.

ஒரு பருப்பு வியாபாரியிடம் 5 டன் பருப்பு இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவரிடம் ஒரு நிறுவனம் இணையதளம் மூலம் கிலோ ரூ. 30-க்கு உளுத்தம் பருப்பு வாங்க ஒப்பந்தம் செய்து கொள்கிறது. பிறகு, வேறொரு நிறுவனம் அதே வியாபாரியிடம் ஒரு கிலோ பருப்பை ரூ. 50-க்கு வாங்குவதாகவும், தமக்கு 10 டன் பருப்பு தேவை என்றும் கேட்கிறது. அவர் ரூ. 30-க்கு பருப்பை விற்பதாக ஒப்பந்தம் செய்து கொண்ட நிறுவனத்திடமிருந்து, அதே பருப்பை ரூ. 40-க்கு வாங்கிக் கொள்வதாக புதிய ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, அந்தப் பருப்பை ரூ. 50-க்கு வாங்குவதாகக் கூறிய நிறுவனத்திடம் விற்க ஒப்புக் கொள்கிறார். இப்படி பல நிறுவனங்கள் அதிக விலைக்கு வாங்குவதாக ஒப்பந்தம் போட்டுக் கொள்கின்றன. நாட்டின் ஒட்டு மொத்த பருப்பு விளைச்சலும் இந்த நிறுவனங்களின் இரும்புப் பிடியில் சிக்கிக் கொண்டு விடுகிறது.

பிறகு இந்த நிறுவனங்கள், அவற்றைப் பதுக்கி வைத்துக் கொண்டு தட்டுப்பாட்டை உருவாக்கி, மீண்டும் விலையை உயர்த்தி அதே பருப்பு வியாபாரியிடம் கிலோ ரூ. 60-க்கு விற்கின்றன. கடைசியில் ரூ. 30-க்கு விற்ற பருப்பு இந்த இணையதள ஊக வணிக சூதாட்டத்துக்குப் பிறகு ஒருமடங்கு விலை ஏறிவிடுகிறது. இதனால் பருப்பு உற்பத்தி செய்யும் விவசாயிக்கோ, விற்பனை செய்யும் வியாபாரிக்கோ ஒரு பலனுமில்லை; மாறாக, விலையேற்றத்தின் பாரத்தை அவர்கள் சுமக்க வேண்டியிருக்கிறது. உற்பத்தியிலோ விற்பனையிலோ எவ்வித பங்களிப்பையும் செய்யாத நிழல் தரகர்களான இந்த நிறுவனங்கள், ஊக வணிகத்தின் மூலம் கோடிகோடியாய் கொள்ளையடிக்கின்றன.

கடந்த சில மாதங்களில், இணையதள விற்பனையின் விளைவாக, உளுந்துக்கு செயற்கையான தட்டுப்பாடு ஏற்பட்டு, உளுத்தம்பருப்பின் விலை ஒரு மடங்கு உயர்ந்து விட்டது. இதனால் அப்பள உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கானோர் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் பருப்புத் தேவை ஆண்டுக்கு ஏறத்தாழ 300 லட்சம் டன்கள்தான். ஆனால், கடந்த ஓராண்டில் மட்டும் ஏறத்தாழ 6 கோடி டன்கள் அளவுக்கு ''ஆன்லைன் வர்த்தகம்'' மூலம் சூதாட்டம் நடந்துள்ளது. இவ்வளவு பிரம்மாண்டமாக இந்த சூதாட்ட வர்த்தகம் நடந்தபோதிலும், உண்மையில் இந்த இணையதள விற்பனை மூலம் ஏறத்தாழ 6000 டன்கள் அளவுக்குத்தான் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 6000 டன் பருப்பு வாங்கிய ஒருவர் அதை 6 கோடி டன் பருப்பாக மாற்றி விற்க முடியுமா? ஒருக்காலும் சாத்தியமில்லை என்று நீங்கள் அடித்துச் சொல்லலாம். ஆனால், இதுதான் ஊக வணிகச் சூதாட்டம். எவ்வித உரிமமோ, கட்டுப்பாடோ இல்லாமல், உற்பத்திக்கும் வியாபாரத்துக்கும் தொடர்பே இல்லாத கோட்டு-சூட்டு போட்ட பேர்வழிகள், குளுகுளு அறையில் கணிப்பொறி முன்னே அமர்ந்து கொண்டு நடத்தும் இந்த சூதாட்டக் கொள்ளைக்குப் பெயர்தான் ''ஆன்லைன் வர்த்தகம்.'' சூடாக நடக்கும் இந்தச் சூதாட்டத்தைத்தான், ''விறுவிறுப்பான வர்த்தகம், பங்குச் சந்தை விலைப் புள்ளிகள் உயர்வு'' என்றெல்லாம் பொருளாதார சூரப்புலிகளும் ஆட்சியாளர்களும் சித்தரித்து, நாடு நால்கால் பாய்ச்சலில் முன்னேறி வருவதாக நமது காதில் பூச்சுற்றுகின்றனர்.

ஆனால், இணையதள விற்பனை எனப்படும் இந்த ஊக வணிகச் சூதாட்டத்தினால், விலைவாசிகள் தாறுமாறாக உயர்கின்றன. இணைய தள சூதாட்ட வர்த்தகர்கள் செயற்கையான உணவு தானியத் தட்டுப்பாட்டை உருவாக்குவதால் கடத்தலும் பதுக்கலும் கள்ளச் சந்தையும் பெருகுகின்றன. இந்த இணையதள விற்பனையால், நேரடி கொள்முதல் - விற்பனைக்காக வாய்ப்புகள் குறைந்து பல்லாயிரக்கணக்கான வியாபாரிகளும், மண்டித் தொழிலாளர்களும் சரக்கு போக்குவரத்துத் தொழிலாளர்களும் வாழ்விழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரமே சூதாட்டமாகி திவாலாகிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. சுருக்க



படிப்பகம்

www.padippakam.com

மாகச் சொன்னால், நாட்டைச் சூறையாடி வரும் ஏகாதிபத்தியங்கள், உணவு தானிய வர்த்தகத்தையும் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செய்யும் மறுகாலனியத் தாக்குதலின் ஓர் அங்கம்தான் ''ஆன்லைன் வர்த்தகம்''.

இணையதள விற்பனை ஏற்பாட்டின் மூலம் தரகுப் பெருமுதலாளித்துவ - ஏகாதிபத்திய வர்த்தக சூதாடிகளின் பகற்கொள்ளைக்குப் பட்டுக் கம்பளம் விரித்து விசுவாச சேவை செய்து வரும் காங்கிரசு கூட்டணி அரசு, இதுவும் போதாதென்று பருப்பு இறக்குமதியைத் தாராளமயமாக்கி, இறக்குமதிக்கான சுங்கவரியை 10% குறைத்துள்ளது. மழை-வெள்ளம் காரணமாக, கடந்த ஆண்டில் பயறு விளைச்சல் குறைந்து விட்டதால், தட்டுப்பாட்டைப் போக்க அரசாங்கம் தாராளமாக இறக்குமதி செய்யும் என்பதைத் தெரிந்து கொண்ட அன்னிய வர்த்தக நிறுவனங்கள், பயறு விலையைத் தாறுமாறாக உயர்த்திக் கொண்டு ஆதாயமடைந்தன. தற்போது சுங்கவரிக் குறைப்பினால் இரட்டை ஆதாயமடைந்துள்ளன. அதேநேரத்தில், அந்நிறுவனங்களிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பயறினை உடைத்து பருப்பாக மாற்றும் சிறு தொழில் பருப்பு ஆலை உரிமையாளர்களும் வியாபாரிகளும் இணையதள விற்பனையால் பாதிக்கப்பட்டு நிற்கிறார்கள். சாமானிய மக்களோ விலையேற்றத்தால் திணறுகிறார்கள்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்துக்கு அடித்தளம் அமைக்கும் இணையதள விற்பனையின் கொள்ளையையும் பாதிப்பையும் உணரத் தொடங்கியுள்ள உள்ளூர் வர்த்தகர்களும் வியாபாரிகளும் ஆன்லைன் வர்த்தகத்தைத் தடை செய்யக் கோரி கண்டனக் குரல் எழுப்பி வருகின்றனர். ''ப.சிதம்பரம் அண்ணாச்சி, பருப்பு விலை என்னாச்சி?'' என்பதோடு இக்கண்டனக் குரல் முடங்கி விடாமல், போராட்டப் பெருங்குரலாகக் கிளர்ந்தெழ வேண்டும்; ஆன்லைன் வர்த்தகத்துக்குத் தடை செய்யக் கோரும் இப்போராட்டத்தை, நாட்டைச் சூறையாடும் மறுகாலனியாக்கத்துக்கு எதிரான போராட்டமாக வியாபாரிகளும் உழைக்கும் மக்களுக்கும் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

• குமார்

# மேடைக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு! கூட்டணிக்கு தன்னார்வக் குழுக்கள்!

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாளையொட்டி, சி.பி.எம். கட்சியின் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கடந்த 12.9.06 அன்று திருச்சியில் அய்க்கஃப் அரங்கில் ஒரு கருத்தரங்கை நடத்தியது. த.மு.எ.ச. மாநிலத் துணைத்தலைவரான கவிஞர் நந்தலாலா தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில், ''பாதை தவறிய கால்கள்'' என்ற தலைப்பில் இந்தியப் பொருளாதாரம் உலக வர்த்தகக் கழகத்தின் இரும்புப் பிடியில் சிக்கியுள்ளதை விளக்கி, பொருளாதார ஆய்வறிஞரான பேரா. எம். ஜேசு சிறப்புரையாற்றினார். ப.சிதம்பரத்தின் பொருளாதாரப் பித்தலாட்டத்தையும், தனியார்மயம் - தாராளமயத்தை முறியடிக்க வேண்டிய அவசியத்தையும் பற்றி வீராவேசமாக அவர் பேசியதைப் பார்க்கும்போது, இது த.மு.எ.ச. கூட்டமா, அல்லது புரட்சிகர அமைப்புகள் நடத்தும் கூட்டமா என்று நமக்கே குழப்பமாகி விட்டது. கடைசியில், இவையெல்லாம் வெற்றுச் சவடால்கள்தான் என்று நிரூபணமாகியது.




பார்வையாளர்கள், யாருடைய தலைமையில் தனியார்மய - தாராளமயத்தை எதிர்த்துப் போராடுவது என்று கேட்டபோது, ''உலக சமூக மன்றத்தின் (W.S.F.) தலைமையில் திரண்டு போராட வேண்டும்'' என்று ஒரே போடாகப் போட்டார், பேரா. ஜேசு. உலக சமூக மன்றம் என்பது ஏகாதிபத்தியங்களால் உருவாக்கப்பட்ட கைக்கூலி அமைப்பாயிற்றே என்று கேட்டபோது ''இப்போதைக்கு வேறு அமைப்புகள் இல்லை; இருப்பதைக் கைப்பற்றி நாம் போராடுவதுதான் சரியானது'' என்று ஏகாதிபத்திய கைக்கூலிகளுடன் கூட்டணி கட்ட உபதேசித்தார். சீனா தனியார்மயம் - தாராளமயத்தை ஆதரிக்கிறதே, நாம் மட்டும் ஏன் எதிர்க்க வேண்டும் என்று கேட்டதற்கு, ''சீனா, வலிமைமிக்க வாளை மீனாக உள்ளது; இந்தியாவோ வலுவிழந்த அயிரை மீனாக இருக்கிறது. எனவே, நாம் வலுப்பெற்ற பிறகு சீனாவைப் போல இக்கொள்கைகளைச் செயல்படுத்துவதில் தவறில்லை'' என்று ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியக் கொள்கைக்கு வெளிப்படையாகவே பக்கமேளம் வாசித்தார் இந்தப் பேராசிரியர்.

வலுவிழந்த ஏழை நாடுகள் தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்க்க வேண்டும்; வலுவான நாடுகள் ஆதரிக்க வேண்டும் என்ற பேராசிரியரின் இச்சந்தர்ப்பவாதக் கொள்கையின்படி, மாநிலத்தைத் தொழில்மயமாக்கி வலிமை பெறுவதற்காகவே நாங்கள் தனியார்மயம் - தாராளமயத்தை மனித முகத்தோடு செயல்படுத்துகிறோம் என்கிறோம், மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, நல்லவேளை! மே.வங்க முதல்வர் இப்படிச் செய்வது சரியா என்று யாரும் கேள்வி கேட்டு பேராசிரியரைச் சங்கடப்படுத்தவில்லை.

ஏகாதிபத்தியக் கைக்கூலிகளை தன்னார்வக் குழுக்களின் கூடாரம்தான் உலக சமூக மன்றம். த.மு.எ.ச.வினர் கருத்தரங்கை நடத்திய இடமோ கிறித்துவ தன்னார்வக் குழுவின் அய்க்கஃப் அரங்கம்! அங்கு உலக சமூக மன்றத்தின் கொள்கையையே தமது கொள்கையாக அறிவிக்கும் த.மு.எ.ச.வின் கருத்தரங்கம்!

தனது சொந்தக் காலில் நின்று வெள்ளை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சுதேசிக் கப்பலோட்டினார் வ.உ.சிதம்பரனார். போலி கம்யூனிஸ்டுகளோ ஏகாதிபத்தியக் கைக்கூலிகளுடன் கூட்டணி கட்டிக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு காகிதக் கப்பல் விடுகிறார்கள். அடடா! எப்பேர்ப்பட்ட புரட்சி!

*- பு.ஜ. செய்தியாளர், திருச்சி.*



படிப்பகம்

www.padippakam.com

## போலீசு!

# சட்டத்திற்கும் மேலான கிரிமினல்கள்

**போலீசு அதிகாரி பிரேம்குமாரின் அட்டூழியங்களை எதிர்த்து, 25 ஆண்டு காலமாகச் சட்டரீதியாகப் போராடி வரும் நல்லகாமனின் கதை நிரூபித்துக் காட்டும் உண்மை.**

சங்கரராமன் கொலை வழக்கின் விசாரணை அதிகாரிகளில் ஒருவரும், முன்னாள் காஞ்சிபுரம் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளருமான பிரேம்குமார் செப்டம்பர் 8-ஆம் தேதி முதல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். பிரேம்குமார் மீது திரு.நல்லகாமன் தொடர்ந்த கிரிமினல் வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பதாக ஜூலை 2003-இல் மதுரை விரைவு நீதிமன்றம் அளித்த தீர்ப்பினடிப்படையில் அவரை நிரந்தரமாகப் பணிநீக்கம் செய்வது தொடர்பாக செப்டம்பர் 1-ஆம் தேதி தமிழக அரசு பிரேம்குமாருக்கு விளக்கம் கோரும் நோட்டீசையும் ஏற்கெனவே அனுப்பியிருக்கிறது.

பிரேம்குமார் மீதான இந்த நடவடிக்கை, 'ஜெயேந்திரர் மீதான கொலை வழக்கைப் பலவீனப்படுத்தும் நோக்கத்தில் தி.மு.க. அரசால் எடுக்கப்பட்டிருப்பதாக' முன்னாள் முதல்வர் ஜெயலலிதா குற்றம் சாட்டியிருக்கிறார். ''எந்தக் குற்ற வழக்கிலும் தண்டிக்கப்படும் அதிகாரி மீது நிர்வாக நடவடிக்கை எடுப்பது வழக்கமானதுதான் என்றும், இதற்கு உள்நோக்கம் கற்பிப்பது துரதிருஷ்டவசமானது என்றும்'' தமிழக அரசின் உள்துறைச் செயலர் ஜெயலலிதாவிற்கு மறுப்பு அறிக்கை விடுத்திருக்கிறார்.

பிரேம்குமார் மீதான நடவடிக்கைக்கு அடிப்படையாக அமைந்துள்ள நல்லகாமன் என்ற முன்னாள் இராணுவ அதிகாரி (சுபேதார்) நீதிக்காக நடத்திய நீண்ட துயரமிக்க போராட்டம் பற்றியோ, அவருடைய குடும்பத்தைச் சித்திரவதை செய்தது மட்டுமின்றி, கடந்த 25 ஆண்டுகளாக உள்ளூர் நீதிமன்றம் முதல் உச்சநீதி மன்றம் வரை அவரை அலையவைத்த பிரேம்குமாரின் சட்டவிரோத நடவடிக்கைகளைப் பற்றியோ உள்துறைச் செயலர் தனது அறிக்கையில் எதுவும் கூறவில்லை. தி.மு.க.விற்கும் அ.தி.மு.க.விற்குமான மோதலில் நல்லகாமன் என்ற முதியவரின் போராட்டம் பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதே உண்மை.

மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்த நல்லகாமனின் மனைவி சீனியம்மாள், அதே ஊரில் சும்மா கிடந்த ஒரு வீட்டை 5,000 ரூபாய்க்கு ஒத்திக்கு வாங்கி, உரிமையாளரின் அனுமதியுடன் ரூ. 4,000 வரை செலவு செய்து பழுது பார்த்து, கழிப்பறை போன்றவற்றைக் கட்டி 1976 முதல் அங்கே வசித்து வந்தார்.

வீட்டைக் காலி செய்யச் சொன்னார் அதன் உரிமையாளர். காலி செய்வதென்றால் ஒத்திப் பணத்தைத் திருப்பித் தரவேண்டும் என்பது ஊருக்கே பொருந்தும் நியாயம். ஆனால் இது போலீசுக்காரனுக்குப் பொருந்துமா? பணம் கொடுக்க முடியாது; காலி செய் என்றார் வீட்டின் உரிமையாளரான பைரவ் சிங் என்ற உதவி சப்-இன்ஸ்பெக்டர் (ஆயுதப்படைப் பிரிவு).

இந்தப் பிரச்சினையில் வாடிப்பட்டியில் சார்பு ஆய்வாளராக இருந்த பிரேம்குமார் கட்டைப் பஞ்சாயத்து செய்தார். அந்த அநீதியான கட்டைப் பஞ்சாயத்துக்குக் கட்டுப்பட மறுத்த குற்றத்துக்காக நல்லகாமன், அவரது மனைவி சீனியம்மாள் மற்றும் பிள்ளைகளை ரத்தம் சொட்டச் சொட்ட அடித்து, சங்கிலியால் பிணைத்து நகரம் முழுதும் ஊர்வலம் விட்டார். தன்னைக் கொலை செய்ய முயன்றதாகப் பொய் வழக்குப் போட்டு நல்லகாமனையும் அவரது மகனையும் சிறையிலும் தள்ளினார். இதை எதிர்த்து ஊரே திரண்டு போராடியது. பிரேம்குமார் மீது நல்லகாமன் வழக்குத் தொடர்ந்தார். பிரச்சினை அன்று சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டது. விசாரணை நடத்திய ஆர்.டி.ஓ. ''பிரேம்குமார் மீது கொலை முயற்சி உள்ளிட்ட 7 குற்றப்பிரிவுகளில் வழக்கு தொடருமாறு'' அரசுக்கு சிபாரிசு செய்தார். வழக்கும் தொடரப்பட்டது. 1983-இல் பிரேம்குமார் சஸ்பெண்டு செய்யப்பட்டார். ஆனால், கிரிமினல் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே 1985-இல் பிரேம்குமாருக்கு டி.எஸ்.பி.யாகப் பதவி உயர்வு வழங்கியது, (அ.தி.மு.க.) அரசு. அதேநேரத்தில், நல்லகாமன் மீது பிரேம்குமார் போட்டிருந்த பொய் வழக்குகள் காரணமாக, முன்னாள் இராணுவ வீரருக்குக் கிடைக்கக் கூடிய அரசு வேலை வாய்ப்புகள் கூட அவருக்கு மறுக்கப்பட்டன.

இதற்கிடையில், ஆர்.டி.ஓ. அறிக்கை அடிப்படையில் தன் மீது

சென்னையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் (இடமிருந்து) நல்லகாமன், ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு மற்றும் மதுரை மாவட்ட ம.உ.பா. மையத்தின் செயலாளர் லயோனல் அந்தோணிராஜ்.






படிப்பகம்

www.padippakam.com

அரசு தொடர்ந்த வழக்கையே தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பும் வாங்கினார் பிரேம்குமார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தை அணுகினார் நல்லகாமன். பிரேம் குமார் மீதான வழக்கைத் தள்ளுபடி செய்யக் கூடாது என்று கூறிய உச்சநீதி மன்றம், அதனை உடனே விசாரித்து முடிக்கவேண்டும் என்றும் 7.11.89-இல் உத்தரவிட்டது. ஆனால் 2002-ஆம் ஆண்டு வரை (13 ஆண்டுகள்) மதுரை நீதிமன்றத்தில் விசாரணையே தொடங்கவில்லை.

''பிரேம்குமார் பிடி வாரண்டுக்கு சிக்காத தலைமறைவுக் குற்றவாளி'' **(Absconding)** என 16.9.97 அன்று அறிவித்தது மதுரை நீதிமன்றம். வாரண்டுக்குச் சிக்காத இந்தக் குற்றவாளிக்கு 1998-இல் கூடுதல் கண்காணிப்பாளராகவும், 1999-இல் கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு வழங்கியது அன்றைய (தி.மு.க.) அரசு.

இந்நிலையில் பிரேம்குமார், நல்லகாமனின் வழக்குகள் அனைத்தையுமே தள்ளுபடி செய்யக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் மீண்டும் வழக்கு தொடர்ந்தார். 1989 உச்சநீதி மன்றத் தீர்ப்பையே மறைத்துவிட்டு உயர்நீதி மன்றத்தை ஏமாற்றித் தீர்ப்பு வாங்க முயன்ற பிரேம்குமார் மீது, நீதிபதி திரு.கற்பகவிநாயகம் 6.6.2002 அன்று வழங்கிய தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

''சட்டத்தின் மீதோ, உண்மையின் மீதோ பிரேம்குமாருக்குக் கடுகளவுகூட மரியாதை இல்லை. பொய் சொல்லி இந்த நீதிமன்றத்தை ஏமாற்றி, எப்படியாவது இந்த வழக்கை ஒழித்து விட வேண்டும் என்பதுதான் இவரது நோக்கம்.... இவர் மீது உள்ள வழக்குகள் முடியும் வரை இவருக்கு அளிக்கப்பட்ட பதவி உயர்வே தற்காலிகமானது தான் என்று ஏற்கெனவே உயர்நீதி மன்றம் கூறியுள்ளது. அவ்வாறிருக்க இவர் எப்படி பதவி உயர்வு பெற்றார் என்பது தெரியவில்லை..... இவர் மீதான குற்றங்கள் உண்மையானால், இப்படி ஓர் ஆளை போலீசுத் துறையில் இத்தனை நாள் வைத்திருந்ததே மிகப் பெரிய வெட்கக்கேடாக இருக்கும்'' என்று கூறி நீதிமன்றத்தை மோசடி செய்த குற்றத்துக்காக **(perjury)** ரூ. 10,000 அபராதமும் விதித்தார்.

இந்தத் தீர்ப்புக்குப் பிறகும் அ.தி.மு.க. அரசு பிரேம்குமாரை பதவி நீக்கம் செய்யவில்லை. மாறாக, 2003-ஆம் ஆண்டு மதுரை விரைவு



**போலீசு அதிகாரி பிரேம்குமார்.**

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை தொடங்கியவுடன், பிரேம்குமாரை மதுரை நகரிலேயே காவல்துறை அதிகாரியாக நியமித்தது. எடுபிடிகளும் போலீசு பரிவாரங்களும் சூழ நீதிமன்ற வளாகத்தில் சாட்சிகளையும் வழக்கு ரைஞர்களையும் மிரட்டினார் பிரேம் குமார். ''பிரேம்குமார் மதுரையில் அதிகாரியாக இருந்தால் இந்த வழக்கில் நீதி கிடைக்காது'' என்று மீண்டும் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து, நீதி மன்ற உத்தரவிற்குப் பிறகுதான் மதுரையிலிருந்து அவரை மாற்றியது அ.தி.மு.க. அரசு.

கடைசியாக, 1982-இல் போடப்பட்ட இந்த வழக்கு 2003-ல் விசாரித்து முடிக்கப்பட்டது. பிரேம்குமாருக்கு எதிராக கொலைமுயற்சி உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை ஆர்.டி.ஓ.வே பதிவு செய்திருந்த போதும், தற்செயலாகக் காயம் விளைவித்த குற்றத்தை மட்டும் தான் பிரேம்குமார் செய்திருப்பதாகத் தீர்ப்பளித்தது மதுரை விரைவு நீதிமன்றம். அதற்கும் கூடத் தண்டனை ஏதும் வழங்காமல் நன்னடத்தையைக் கடைப்பிடிக்குமாறு பிரேம்குமாருக்கு ''எச்சரிக்கை'' **(admonition)** மட்டும் செய்தது.

நியாயமற்ற இந்தத் தீர்ப்பை எதிர்த்து, ''கொலை முயற்சி உள்ளிட்ட குற்றங்களுக்காக பிரேம்குமாரைச் சிறை வைக்கவேண்டும்'' என்று மதுரை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்கிறார் நல்லகாமன். ஆனால், பிரேம்குமாருக்கு எதிராக கொலை முயற்சி வழக்கு தொடுத்த அரசோ, இந்தக் கணம் வரை மேல்முறையீடு செய்யவில்லை. 25 ஆண்டு காலம் இடைவிடாமல் சட்டபூர்வமான வழிகளில் நீதியைப் பெறுவதற்குப் போராடித் தோற்றிருக்கிறார் நல்லகாமன். இன்று அவருக்கு வயது 74. நல்லகாமனைத் தோற்கடித்தது பிரேம்குமார் மட்டுமல்ல; 25 ஆண்டுகளாகத் தமிழகத்தை ஆண்ட அ.தி.மு.க., தி.மு.க. அரசாங்கங்களும், போலீசின் உயரதிகாரிகளும் பிரேம்குமாருக்குப் பக்கபலமாக நின்றிருக்கிறார்கள். எனவே, தற்போது பிரேம்குமாரை வேலைநீக்கம் செய்வதன் மூலம் மட்டும் நீதி நிலைநாட்டப்பட்டு விடும் என்று நாங்கள் நம்பவில்லை.

வாடிப்பட்டியில் பிரேம்குமார் நிகழ்த்திய கொடுமையில் தொடங்கி, 25 ஆண்டு காலம் அவர் நடத்திய தில்லுமுல்லுகள் அனைத்தையும் அம்பலப்படுத்தி அரசு பகிரங்கமாக அறிக்கை வெளியிட வேண்டும்.

25 ஆண்டுகளாக சட்டத்தை வளைப்பதற்கும், மீறுவதற்கும் பிரேம் குமாருக்குத் துணை நின்ற உயரதிகாரிகள் அனைவர் மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நீதிமன்றத்தில் நீதி கிடைக்கும் என்று நம்பி தனது சொத்துக்களையெல்லாம் விற்று வழக்காடி, வெம்பித் தனிமரமாக நிற்கும் நல்லகாமனுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும். இந்தத் தொகையை மக்களுடைய வரிப்பணத்திலிருந்து அல்லாமல், பிரேம்குமார் மற்றும் அவருக்குத் துணை நின்ற அதிகாரிகளிடமிருந்து தண்டத்தொகையாக வசூலித்துத் தர வேண்டும்.

ஆர்.டி.ஓ. விசாரணையின் அடிப்படையில் தமிழக அரசு பிரேம்குமார் மீது தொடுத்த வழக்கில் மதுரை விரைவு நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் அரசும் மேல்முறையீடு செய்து கொலை முயற்சி உள்ளிட்ட குற்றங்களுக்கு பிரேம்குமாருக்கு சிறைத்தண்டனை வழங்கக் கோர வேண்டும்.

இன்னொரு பிரேம்குமார் தோன்றாமல் இருப்பதற்கும், இன்னொரு நல்லகாமன் பலிகடா ஆகாமல் இருப்பதற்கும் இந்த நடவடிக்கைகள் அவசியம்.

**- மனித உரிமைப் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு.**

*(காவல்துறை கண்காணிப்பாளர் பிரேம்குமார் தமிழக அரசால் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டதையடுத்து, மனித உரிமை பாதுகாப்பு மையம் 22.9.06 அன்று சென்னையில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பு கூட்டத்தில் வெளியிட்ட பத்திரிகை செய்தியின் சுருக்கமான தொகுப்பு.)*



படிப்பகம்

www.padippakam.com

## சுய உதவிக் குழுக்கள்

# விவசாயிகளை வேட்டையாடும் புதிய கந்துவட்டிக் கும்பல்

மகாராஷ்டிரா மாநிலத்தின் விதர்பா பிராந்தியத்தில் கடன்சுமை தாளாமல் பருத்தி விவசாயிகள் அன்றாடம் தற்கொலை செய்து கொண்டு வரும் கொடுமை தொடரும் அதேவேளையில், அண்மைக்காலமாக ஆந்திராவிலும் இதேபோல கடன்சுமை தாளாமல் விவசாயிகள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டு மாண்டு வருகிறார்கள். கடந்த 3 மாதங்களில் மட்டும் குண்டூர், பிரகாசம், கிருஷ்ணா, கிழக்கு கோதாவரி மாவட்டங்களில் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கடன் சுமையாலும் அநியாய வட்டிக் கொடுமையாலும் மாண்டு போயுள்ளார்கள். இது இன்னும் பல மாவட்டங்களுக்குப் பரவுமோ என்ற மரணபயம் ஆந்திரத்தைப் பிடித்தாட்டுகிறது.


தாராளமயத்தால் வாழ்விழந்த விதர்பா விவசாயிகள் கந்து வட்டிக்காரர்களிடம் கடன் வாங்கி வட்டிக் கொடுமை தாளாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ஆந்திர விவசாயிகளோ, சுயஉதவிக் குழுக்கள் மூலம் நுண்கடன் நிறுவனங்களிடம் கடன் வாங்கி வட்டிக் கொடுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்டு வருகிறார்கள். விதர்பாவில் கந்து வட்டிக்காரர்களின் கொள்ளை. ஆந்திராவில் தன்னார்வத் 'தொண்டு' நிறுவனங்களின் கொள்ளை. பலியாவதோ ஏழை-நடுத்தர விவசாயிகள்!

இந்தியாவிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுண்நிதி நிறுவனங்களில் ஆகப் பெரும்பாலானவை தன்னார்வக் குழுக்களால் (NGOs) நடத்தப்படுகின்றன. பாதுகாப்புத் தொகையாக கணிசமான சேமிப்பைக் கொண்டுள்ள சுய உதவிக் குழுக்களைக் கண்டறிந்து, அக்குழுக்களுக்கு வங்கிகளிலிருந்து இத்தன்னார்வக் குழுக்கள் கடன் வாங்கித் தருகின்றன. வங்கிகளுக்கும் சுய உதவிக் குழுக்களுக்கும் இடையிலான கொடுக்கல் - வாங்கல் விவகாரங்களை ஒருங்கிணைத்து முறைப்படுத்தும் கங்காணி வேலையையும் இத்தன்னார்வக் குழுக்கள் செய்கின்றன.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கிடைக்கும் கடனுதவியை நுண்கடன் என்றழைக்கின்றனர். இக்கடனை வைத்து ஊறுகாய், அப்பளம், மசாலா பொடி, சோப்பு, கைவினைப் பொருட்கள், வீட்டு உள் அலங்கார பொருட்கள், ஊதுபத்தி, கவரிங் நகைகள் முதலான தொழில்களில் சுய உதவிக் குழுக்கள் முதலீடு செய்கின்றன. இத்தகைய தொழில்களே நுண்தொழில்கள் எனப்படுகிறது. இதுதவிர மலர்ப் பண்ணை, மூலிகைப் பண்ணை, கால்நடை வளர்ப்பு முதலான சற்று விரிவான அளவிலும் இக்கடன்கள் சுய உதவிக் குழுக்களால் முதலீடு செய்யப்படுகின்றன.

''போண்டியாகிப் போன விவசாயிகள், சமூகத்தின் விளிம்பு நிலையிலுள்ள ஏழை-எளிய மக்கள், அதிலும் குறிப்பாக பெண்கள் இத்தகைய நுண்கடன் - நுண்தொழில் மூலம் கணிசமாக சம்பாதிக்க முடியும்; சொந்தக் காலில் நிற்க முடியும். வறுமையை விரட்ட முடியும்; எழுத்தறிவின்மை, பெண்ணடிமை, சாதிய ஒடுக்குமுறை முதலான சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியும். தன்னம்பிக்கை, தொழில் முனைப்பு, கூட்டுறவு, நிர்வாகத் திறன் முதலானவை ஒடுக்கப்பட்ட மக்களிடம் வளரும்'' என்றெல்லாம் சர்வரோக நிவாரணியாக இந்த நுண்கடன் - நுண்தொழிலை ஆட்சியாளர்களும் தன்னார்வக் குழுக்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்தன. ஐ.நா. மன்றத்தின் ஆலோசனைப்படி 2005-ஆம் ஆண்டை நுண்கடன் ஆண்டாக அறிவித்து நாடெங்கும் பல கருத்தரங்குகளும் விழாக்களும் கொண்டாடப்பட்டன. கடந்த 2005-ஆம் ஆண்டில் நுண்கடன் திட்டத்துக்காக நிதியமைச்சரால் வளர்ச்சி நிதியும் சிறப்புக் கமிட்டிகளும் அமைக்கப்பட்டன.

அத்தனையும் மிகப் பெரிய மோசடி, ஏழை விவசாயிகளைக் கொள்ளையிடுவதற்கான இன்னுமொரு ஏகாதிபத்திய சதி என்பதை ஆந்திர விவசாயிகளின் சாவுகள் மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டன. சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினராகச் சேர்ந்து நுண்கடன் பெற்ற விவசாயிகள், அநியாய வட்டியால் அவதிப்பட்டு, அவமானப்பட்டு, விரக்தியுற்று தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். நுண்கடன் மூலம் வறுமையிலிருந்து விடுபடலாம் என்ற தன்னார்வக் குழுக்களின் வஞ்சக வார்த்தைகளை நம்பி ஏமாந்த விவசாயிகள், மேலும் வறுமைக்கும் கடன்சுமைக்கும் தள்ளப்பட்டு வாழ்விழந்து நிற்கிறார்கள்.





படிப்பகம்

www.padippakam.com

தன்னார்வக் குழுக்களின் நுண்நிதி நிறுவனங்களுக்கு வங்கிகள் 8.5 முதல் 15 சதவீத வட்டிக்குக் கடன் கொடுக்கின்றன. நுண்நிதி நிறுவனங்களோ இக்கடனை வாங்கி 20 முதல் 36 சதவீத வட்டிக்கு சுயஉதவிக் குழுக்களுக்குக் கொடுக்கின்றன. சுயஉதவிக் குழுக்களோ, மேலும் கணிசமான வட்டி வைத்து தமது குழு உறுப்பினர்களுக்குக் கடனாகக் கொடுக்கின்றன. வங்கிகளிடமிருந்து புதிய கடன் வாங்க வேண்டுமானால், வாங்கிய கடனை இச்சுய உதவிக் குழுக்கள் முறையாக வட்டியுடன் திருப்பி அடைக்க வேண்டும். இதனால் கடன் வாங்கிய உறுப்பினர்களைக் கண்காணிப்பதும், கடன் தவணையை வட்டியுடன் முறையாகச் செலுத்த நிர்பந்திப்பதுமாக சுயஉதவிக் குழுக்கள் மாறி விட்டன. கடனை அடைக்கத் தவறிய உறுப்பினர்களின் வீட்டிலுள்ள பொருட்களை ஜப்தி செய்யும் கொள்ளையர்களாக தன்னார்வக் குழுக்கள் வளர்ந்து விட்டன.

இத்தன்னார்வக் குழுக்கள், சுயஉதவிக் குழுக்கள் மூலம் கறாராக வட்டியை வசூலித்து முறையாகக் கடனைத் திருப்பிச் செலுத்துவதால், வங்கிகளுக்கு உத்தரவாதமான இலாபம் கிடைக்கிறது. வங்கிகள் தரும் இதர கிராமப்புற கடன்களைவிட, நுண்கடன் மூலம் கூடுதலாக இலாபமும் முறையாக கடன் திருப்பிச் செலுத்தப்படுவதும் நடப்பதால், அரசு வங்கிகள் மட்டுமின்றி பன்னாட்டு ஏகபோக வங்கிகளும் நிதிநிறுவனங்களும் கிராமப்புற ஏழைகளைக் கொள்ளையிட களத்தில் குதித்துள்ளன. 1992-ல் ஊரக மற்றும் விவசாய வளர்ச்சி வங்கி ஆதரவுடன் 225 சுய உதவிக் குழுக்களுடன் தொடங்கப்பட்ட நுண்கடன் - நுண்தொழில் திட்டம் இன்று பூதாகரமாக விரிவடைந்துள்ளது. ஏறத்தாழ ரூ. 50,000 கோடி அளவுக்குப் புரளும் இந்திய நுண்கடன் - நுண்தொழில் எனப்படும் கந்துவட்டி தொழிலில், நூற்றுக்கணக்கான வங்கிகளும் 12 இலட்சத்துக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்களும் ஈடுபட்டுள்ளன.

உள்ளூர் அளவில் ஆதிக்கம் செலுத்தும் கந்துவட்டிக்காரர்கள், நிலப்பிரபுக்களை போலவே, அதே தன்மையுடன் புதிய வடிவில் கிராமப்புற ஏழை மக்களைச் சுரண்டும் புதிய கொள்ளைக் கூட்டமாக வங்கிகளும், நுண்நிதி நிறுவனங்களும் தன்னார்வக் குழுக்களும் புதிய பரிணாம வளர்ச்சியை எட்டியுள்ளன. 5 வட்டிக்கும் 10 வட்டிக்கும் சுயஉதவிக் குழுக்கள் மூலம் கடன் வாங்கி, வட்டிக்கு வட்டி பெருகி அவமானத்துக்கும்



**உள்ளூர் அளவில் ஆதிக்கம் செலுத்தும் கந்துவட்டிக்காரர்கள், நிலப்பிரபுக்களை போலவே, அதே தன்மையுடன் புதிய வடிவில் கிராமப்புற ஏழை மக்களைச் சுரண்டும் புதிய கொள்ளைக் கூட்டமாக வங்கிகளும், நுண்நிதி நிறுவனங்களும் தன்னார்வக் குழுக்களும் புதிய பரிணாம வளர்ச்சியை எட்டியுள்ளன.**

சமூகப் புறக்கணிப்புக்கும் ஆளாகி அற்ப உடமைகளும் ஜப்தி செய்யப்பட்டு வாழ வழியின்றிப் போகும் விவசாயிகள், வேறு வழியின்றி தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

தன்னார்வக் குழுக்களை நம்பி மோசம் போன ஆந்திர விவசாயிகள், அடுத்தடுத்து நடக்கும் தற்கொலைச் சாவுகளுக்குப் பிறகு மெதுவாக விழிப்புற்று, மாண்டுபோன விவசாயிகளின் சடலங்களோடு ஊர்வலமாக வந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார்கள். விவசாயிகளின் கோபத்தையும் போராட்டங்களையும் கண்டு பீதியடைந்துள்ள ஆந்திர அரசு, இரு பெரும் நுண்கடன் நிறுவனங்களின் 50 கிளைகளை உடனடியாக மூடுமாறும், கடன் 'சேவை'யை நிறுத்தி வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி, ''நுண்கடன் நிறுவனங்கள் கந்துவட்டிக்காரர்களைவிட மிக மோசமாக நடந்து கொள்கின்றன. 50-60 சதவீத வட்டி வாங்கி ஏழைகளைக் கொள்ளையடிக்கின்றன'' என்று பகிரங்கமாகவே குற்றம் சாட்டி முதலைக் கண்ணீர் வடிக்கிறார். விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளைப் பற்றி விசாரிக்கத் தனிச்சிறப்பான விசாரணைக் கமிஷனையும் அவர் நியமித்துள்ளார்.

ஆனால், ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்டு சர்வகட்சி ஆட்சியாளர்களின் ஆதரவோடு நடைமுறைப்படுத்தப்படுவதுதான் நுண்கடன் திட்டம். அதற்காகவே ஆந்திராவில் பல லட்சக்கணக்கான சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. அரசியல் செல்வாக்கைக் கொண்டு இக்குழுக்களுக்கு நுண்கடன் வழங்கி, அவற்றை எல்லா கட்சிகளும் ஓட்டு வங்கிகளாக மாற்றிக் கொண்டு ஆதாயமடைந்தன. நுண்கடன் நிறுவனங்களின் அநியாய வட்டிக் கொள்ளையையும் சட்டவிரோத கொடுஞ்செயல்களையும் வாய் மூடி அங்கீகரித்து வந்தன. இப்போது நிலைமை விபரீதமானதும், விவசாயிகளின் காவலனாகக் காட்டிக் கொண்டு ஒப்பாரி வைக்கின்றன. இவ்வளவு சாவுகளுக்குப் பின்னரும் நுண்நிதி நிறுவனங்கள் எவ்வளவு வட்டிக்கு கடன் தர வேண்டும் என்பதற்கான வரைமுறையைக் கூட ஆட்சியாளர்கள் அறிவிக்கவில்லை. விவசாயிகளைக் கொள்ளையடித்து தற்கொலைக்குத் தள்ளிய கொலைகார தன்னார்வக் குழுக்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

ஆந்திராவுக்கு அடுத்தபடியாக, அதிகஅளவில் சுயஉதவிக் குழுக்களைக் கொண்டுள்ள மாநிலம் தமிழகம் தான். ஆந்திராவைத் தொடர்ந்து தமிழகத்தில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் நடக்கும் முன்னே, வஞ்சக வலை விரிக்கும் தன்னார்வக் குழுக்களையும் நுண்கடன் - நுண்தொழில் என்ற பெயரில் தொடரும் கந்துவட்டிக் கொள்ளையையும் உடனடியாக உழைக்கும் மக்களிடம் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்; புரட்சிகர - ஜனநாயக சக்திகள் இன்னும் விரைவாகச் செயல்பட்டு, தமிழகம் இன்னுமொரு மயானபூமியாவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

● பாலன்

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

இந்த இதழோடு உங்களது ''புதிய ஜனநாயகம்'' இதழ் 21-வது ஆண்டை நிறைவு செய்கிறது. கடந்த 21 ஆண்டுகளாக இவ்விதழ் தொடர்ந்து வெளிவர பல்வேறு வழிகளிலும் உதவிய உங்கள் அனைவருக்கும், குறிப்பாக கடந்த ஓராண்டு காலத்தில் விற்பனையை விரிவுபடுத்தி புதிய வாசகர்களிடம் புரட்சிகர அரசியலைக் கொண்டு சென்ற முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற, உங்களது ஊக்கமான ஆதரவை அடித்தளமாகக் கொண்டு 22-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர உறுதியேற்கிறோம்.

- ஆசிரியர் குழு.

www.padippakam.com

## "தாமிரவருணி எங்கள் ஆறு! அமெரிக்கக் கோக்கே வெளியேறு!"

# கொலைகார 'கோக்'கைக் எதிர்த்துத் தொடரும் போராட்டம்!

**கோ**க் எதிர்ப்புப் போராட்டக் குழு, கடந்த செப். 3-ஆம் நாளன்று நெல்லையில் கோக் எதிர்ப்பு கருத்தரங்கை நடத்தியது.

''உயிரை உறிஞ்சும் கோக்-பெப்சியைப் புறக்கணிப் போம்! தாமிரவருணியை உறிஞ்சும் கோக் ஆலையை விரட் டியடிப்போம்!'' என்ற தலைப்பில் நெல்லை எம்.எச். பிளாசா வில் நடந்த இக்கருத்தரங்கிற்கு கோக் எதிர்ப்புப் போராட்டக் குழுவின் தலைவரான வழக்குரைஞர் இரா.சி. தங்கசாமி தலைமை வகித்தார். ம.க.இ.க. மாநில இணைச்செயலர் தோழர் காளியப்பன், எழுத்தாளர் சிவசுப்பிரமணியன், ம.உ.பா. மையத்தின் வழக்குரைஞர் இராமச்சந்திரன், மானூர் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் சி.எஸ். மணி, சித்த மருத்துவக் கல்லூரி மாணவர் அரிகர மகாதேவன், வழக்கு ரைஞர் ரமேஷ் ஆகியோர் மறுகாலனியாக்கத்தின் கொடிய வெளிப்பாடான தண்ணீர் தனியார்மயத்திற்கு எதிராகவும், அதன் துலக்கமான சான்றாக உள்ள அமெரிக்க கோக்கிற்கு எதிராகவும் சிறப்புரையாற்றினர். இக்கருத்தரங்கில் ம.க.இ.க. மையக் கலைக்குழுவினர் தமது புரட்சிகர கலைநிகழ்ச்சி மூலம் கோக் எதிர்ப்புப் போராட்ட உணர் வூட்டினர். இறுதியாக,

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வு மையம் கூறும் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை எனப் பேசி, கோக்-பெப்சியின் கையாளாகச் செயல்படும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அன்புமணியை கண்டித்தும்,
- மேற்கண்ட நிறுவனங்களின் மனங்கோ ணாமல் முழுமையான விசுவாசியாகச் செயல் படும் தி.மு.க. அரசைக் கண்டித்தும்,
- நெல்லை மக்களின் கடுமையான எதிர்ப் பையும் மீறி கங்கை கொண்டான் கோக் ஆலைக்கு உரிமம் வழங்கிய அ.தி.மு.க.வுக் கும் தொண்டூழியம் புரிந்து வரும் தி.மு.க.வுக் கும் கொள்கை வேறுபாடு இல்லை என்பதை அம்பலப்படுத்தியும்,
- கோக்கும் பெப்சியும் மக்கள் விரோத நிறுவனங்கள்தான் என அம்பலமான பின்ன ரும், அதன் விளம்பரங்களில் நடிப்பவர்கள் மக்கள் விரோதிகள்-தேச விரோதிகள் என அறிவித்தும்,
- நாடு முழுவதிலும் கோக்-பெப்சி விற்ப னையைத் தடை செய்வதோடு அந்த நிறுவனத் தின் உற்பத்தி நிலையங்களை மூட மத்திய அரசு உத்திரவிட வேண்டுமென்றும்,
- கங்கை கொண்டான் கோக் ஆலையின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும்,
- தண்ணீரை வியாபாரப் பொருளாக மாற்ற உத்திரவிடும் உலக வர்த்தகக் கழகம் - ''காட்'' ஒப்பந்தத்திலிருந்து இந்திய அரசு உடனே வெளியேற வேண்டும் என்றும் இக்கருத்தரங்கில் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. இத்தீர்மானங்களை மக்களிடம் விளக்கி, தொடர்ந்து பிரச்சார - போராட்டப் பணிகளில் ஈடுபட கோக் எதிர்ப்புப் போராட்டக் குழு உறுதியேற்றது.

இக்கருத்தரங்கைத் தொடர்ந்து, மாலையில் நெல்லை - தாழையூத்து சந்தையில் திரளான மக்கள் பங்கேற்புடன் கோக் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை இப்போராட்டக்குழு நடத்தியது.

கேரளத்தில், கோக்-பெப்சி மீதான தடையை அம்மாநில உயர்நீதி மன்றம் அண்மையில் நீக்கியுள்ளதை எதிர்த்து, அம் மாநில மக்கள் கோக் ஆலை மீது தாக்குதல் நடத்தி எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்தகையதொரு போராட்டம் நெல்லையி லும் மூண்டெழுவதற்கான முன்னறிவிப்பாக கோக் எதிர்ப் புப் போராட்டக் குழுவின் தொடர் பிரச்சாரமும் கருத்தரங் கும் ஆர்ப்பாட்டமும் அமைந்துள்ளன.

-பு.ஜ. செய்தியாளர்.








படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

இச்சம்பவம் பற்றி மத்திய ரிசர்வ் போலீசு படை விடுத்துள்ள அறிக்கையில், ''குலாம் முகம்மது ஷேக் கையெறி குண்டை வீச முயலும்பொழுது, அவரைக் கையும் களவுமாகப் பிடித்ததாக''க் கூறியிருக்கிறது. அப்படி பிடிக்கப்பட்டவரை உடனடியாகச் சுட்டுக் கொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்தது என்ற கேள்விக்கு அத்துணை இராணுவப்படை பதில் அளிக்கவில்லை. மாறாக, குலாம் முகம்மது ஷேக் கையெறி குண்டை வீச முயன்றதைப் பொதுமக்கள் பார்த்ததாகக் குறிப்பிட்டு இந்தக் கொலையை நியாயப்படுத்தியுள்ளது.

ஆனால், பந்திபூர் நகரைச் சேர்ந்த பொதுமக்களும், அமர்சிங் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களும் குலாம் முகம்மது ஷேக், இளைஞர் முசுலீம் லீக் கட்சியின் மாணவர் அமைப்பின் தலைவர் என்ற காரணத்திற்காகத்தான் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டு, ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

''இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு, இராணுவத்தின் அட்டூழியங்களை எதிர்த்துப் போராடி வரும் பலரையும் இந்திய இராணுவம் கைது செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான், குலாம் முகம்மது ஷேக்கை, இந்திய இராணுவம் சுட்டுக் கொன்றுவிட்டதாக''க் குற்றஞ் சுமத்தியுள்ளார், முசுலீம் லீக் கட்சியின் தலைவர் முஸாரத் ஆலம்.

இப்படி அப்பாவிகளைக் கொன்றுவிட்டு, அவர்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரிப்பது இந்திய இராணுவத்துக்குக் கைவந்த கலை. ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, சட்டிஸ்புரா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஐந்து அப்பாவி முசுலீம்களைக் கொன்றுவிட்டு, அவர்களைப் பாகிஸ்தான் அனுப்பிய பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி இந்திய இராணுவம் நடத்திய நாடகம் உலகப் பிரசித்தி பெற்றது.




தீவிரவாதியா, அப்பாவியா என உறுதி செய்யப்படாத நிலையிலேயே சுட்டுக் கொல்லப்பட்ட கல்லூரி மாணவர் குலாம் முகம்மது ஷேக்.

1989 தொடங்கி 2003 முடிய ஏறத்தாழ 3,931 காசுமீர் முசுலீம்கள் காணாமல் போய்விட்டதாக, அம்மாநில அரசே அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது. இராணுவத்தாலும், துணை இராணுவப் படைகளாலும் இழுத்துச் செல்லப்பட்ட இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா, இல்லை இறந்து போய்விட்டார்களா என்பதை ''இராணுவ இரகசியம்'' போல இந்திய அரசு மூடி மறைத்து வருகிறது.

76 வயதான அப்துல் அஹத், செப். 2000-இல் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தனது இரு மகன்களை, தனது தள்ளாத வயதையும் பொருட்படுத்தாது இன்னும் தேடிக் கொண்டிருக்கிறார்.

குப்வாரா மாவட்டத்தைச் சேர்ந்த சாரா முகம்மது, ராஷ்டிரிய ரைபிள் இராணுவ அதிகாரிகளால் பிடித்துச் செல்லப்பட்ட தனது கணவர் குலாம் முகம்மதுவை 2004-லிருந்து தேடிக் கொண்டிருக்கிறார். கணவனைத் தேடி அலையும் மனைவியரை, ''அரைக் கைம்பெண்'' என அம்மாநிலத்தில் அழைக்கும் அளவிற்கு புதிய சொல் அகராதிகளை இராணுவத்தின் அட்டூழியங்கள் உருவாக்கி வருகின்றன. இந்தக் காணாமல் போனவர்கள் பற்றிய புள்ளி விவரப் பட்டியலில், போலி மோதல் படுகொலைகளில் கொல்லப்பட்ட காசுமீர் முசுலீம்களின் எண்ணிக்கை அடங்காது.

குலாம் முகம்மது ஷேக் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் அமர்சிங் கல்லூரி மாணவர்களைத் தாக்கும் போலீசு.



நீதிமன்றத்தில் போடப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள், மனித உரிமை கமிசனின் உத்தரவுகள் - இவையெல்லாம், இராணுவத்திற்கும், துணை இராணுவத்திற்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் முன் செல்லாக் காசுகள். இராணுவத்தின் அட்டூழியத்தை யாரும் தட்டிக் கேட்கக் கூடாது; இராணுவச் சிப்பாய்கள் - அதிகாரிகள் மீது யாரும் மனித உரிமை மீறல் வழக்கு தொடரக் கூடாது என்பதற்காகவே, கலவரப் பகுதி சட்டம், ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் ஆகிய பாசிசச் சட்டங்களின் மூலம் இராணுவத்தின் அட்டூழியங்களுக்குச் சட்டபூர்வ பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அம்மாநிலத்தில் நடைபெறும் இராணுவ காலனிய ஆட்சியை மூடிமறைப்பதற்காகவே தேர்தல், சட்டமன்றம் ஆகியவை முகமூடிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தேச பக்தி, நாட்டின் ஒருமைப்பாடு என்ற பெயரில் புனிதப்படுத்தப்படும் இந்த அரசு பயங்கரவாதமானது எல்லை தாண்டி வரும் பயங்கரவாதம் - முசுலீம் மதவெறி பயங்கரவாதத்தைவிட கொடூரமானது, வக்கிரமானது என்பதற்கு ஜம்மு-காசுமீர் இரத்த சாட்சியாக உள்ளது.

● செல்வம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER No: 42648/85

Regn. No: TN/CC(S)Dn/190/06-08
WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# “ஐயோ! பயங்கரவாதம்!”

“ஐயோ, பயங்கரவாதம்!” - தமிழகமே தீவிரவாத - பயங்கரவாதிகளின் பாசறையாக மாறிவிட்டதைப் போலவும் தமிழகத்துக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளதைப் போலவும் கடந்த இரு மாதங்களாக போலீசும் பத்திரிகைகளும் செய்தி ஊடகங்களும் தொடர்ந்து பீதியூட்டி வருகின்றன. ஆகஸ்ட் 15-ஆம் நாளன்று தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தப் போவதாக பீதியூட்டப்பட்டு, எங்கெங்கும் போலீசும் சிறப்பு அதிரடிப் படைகளும் குவிக்கப்பட்டன. ஒரு வாரம் முன்பிருந்தே கல்பாக்கம் அணுமின் நிலையப் பகுதியில் மக்கள் சுதந்திரமாக நடமாடக் கூட முடியாதபடி அறிவிக்கப்படாத ஊரடங்கு உத்தரவு போடப்பட்டு, கெடுபிடிகளும் சோதனைகளும் தொடர்ந்தன.

அதன்பிறகு, புலிகள் ஊடுருவல், ஆந்திராவிலிருந்து நக்சலைட் தீவிரவாதிகள் ஊடுருவல், பெருநகரங்களில் தொழில்நுட்ப மையங்களைத் தகர்க்க சதி, நக்சலைட்டுகள் ஏவுகணை தயாரிப்பு, “ராக்கெட்” ரகு தலைமறைவு, தமிழகத்துக்கு ஆபத்து - “ரெட் அலார்ட்” என்றெல்லாம் பார்ப்பன தினமலரிலிருந்து ‘சூத்திர’ தினகரன் வரை எல்லா நாளேடுகளும் கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டு அலறின. தமிழக எல்லைப் பகுதிகளில் போலீசு அதிரடிப் படைகள் குவிக்கப்பட்டு வாகனச் சோதனையும் காடுகளில் தேடுதல் வேட்டையும் பேருந்து - ரயில் பயணிகளிடம் சோதனையும் விசாரணைகளும் நடந்தன. தீவிரவாத பீதியைச் சாக்கிட்டு, கடந்த செப்டம்பர் 12-ஆம் நாளன்று நக்சல்பாரி புரட்சியாளர் தியாகத் தோழர் பாலனுக்கு தருமபுரியில் ஆண்டுதோறும் வழமையாக நடந்து வரும் வீரவணக்க அஞ்சலி நிகழ்ச்சிக்குக் கூட போலீசு தடை விதித்து அச்சுறுத்தியது.









இந்தப் பீதியூட்டல்களும் கெடுபிடிகளும் அச்சுறுத்தல்களும் வெறுமனே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அல்ல. பயங்கரவாதத்தை முளையிலேயே கிள்ளியெறிவது என்ற பெயரால், மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தைக் கூட தடை செய்து, பாசிச கருப்புச் சட்டங்களை ஏவி, அரசு பயங்கரவாதத்தை நிரந்தரமாக்குவதற்கு முகாந்திரம் தேடும் வகையிலேயே இந்தக் கெடுபிடிகளும் பீதியூட்டல்களும் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.

உண்மையில், வேறொரு கொடிய பயங்கரவாதம் நாட்டையும் மக்களையும் பிடித்தாட்டி பேரழிவை விளைவித்துக் கொண்டிருக்கிறது. ஓராயிரம், ஈராயிரம் பேர்களல்ல; தாராளமயம் தோற்றுவித்த இந்தப் பயங்கரவாதத்தால் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் மேலாகும். இவர்கள் அத்தனை பேரும் நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள். தனியார்மயம் - தாராளமயம் எனும் மறுகாலனியாதிக்கக் கொள்கை நடைமுறைக்கு வந்த 1993-இலிருந்து 2003 வரையிலான பத்தாண்டுகளில் மட்டும் 1,00,248 விவசாயிகள் இப்பயங்கரவாதத் தாக்குதலால் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். இது, மைய அரசின் விவசாய அமைச்சரான சரத்பவார், கடந்த மே 18-ஆம் நாளன்று நாடாளுமன்றத்திலேயே ஒப்புக்கொண்ட கணக்கு.

இந்தப் பயங்கரவாதம் இன்னமும் தொடர்ந்து வேர்விட்டுப் பரவிக் கொண்டிருக்கிறது. இவ்வாண்டு ‘சுதந்திர’ தினத்திற்குப் பிறகு, மகாராஷ்டிராவின் விதர்பா பிராந்தியத்தில் 15 நாட்களில் 60 விவசாயிகளை இப்பயங்கரவாதம் காவு கொண்டுள்ளது. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் “வெள்ளைத்தங்கம்” எனப்படும் பருத்தி சாகுபடி செய்யும் சிறு விவசாயிகள். தாராளமயத்தால் ஏற்பட்ட விலை வீழ்ச்சியாலும் கந்துவட்டிக் கொடுமையாலும் கடந்த ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து இவ்வாண்டு செப்.10-ஆம் தேதி முடிய மொத்தம் 852 விவசாயிகள் விதர்பா பிராந்தியத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். மகாராஷ்டிரா மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா என அடுத்தடுத்து பல மாநிலங்களில் இப்பயங்கரவாதம் விவசாயிகளைக் காவு கொண்டு வருகிறது.

தாராளமயம் எனும் மிகக் கொடிய இம்மறுகாலனிய பயங்கரவாதத்தை மூடி மறைத்து திசைதிருப்பவும், இப்பயங்கரவாதத்தை எதிர்த்து போராடும் மக்களை ஒடுக்குவதற்கான முகாந்திரத்தை ஏற்படுத்திக் கொள்ளவும்தான் “ஐயோ பயங்கரவாதம்!” என்ற பீதியை ஆளும் கும்பலும் பத்திரிகைகளும் திட்டமிட்டே ஊதிப் பெருக்குகின்றன; பெருங்கூச்சல் போட்டு வருகின்றன. •